திருவாந்துறைப் படிப்பகம்


# Saturday மெயில்

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

01 - 17

23-01-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=




# பள்ளிப் படிப்பை இடைநடுவில் கைவிடப்போகும் 5 கோடி 60 இலட்சம் சிறுவர்கள்

சர்வதேசப் பொருளாதார மந்த நிலையின் காரணமாக கல்விச் செயற்பாடுகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட முடியாதிருப்பதன் விளைவாக இன்னும் 5 வருடங்களில் அதாவது 2015 அளவில் உலகின் சுமார் 5 கோடி 60 இலட்சம் சிறுவர்கள் பள்ளிப்படிப்பை இடைநடுவில் விடவேண்டிய நிலை தோன்றப்போகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி,விஞ்ஞான,கலாசார நிறுவனமான யுனெஸ்கோவினால் இவ்வாரம் வெளியிடப்பட்டிருக்கும் உலகளாவிய வருடாந்த கண்காணிப்பு அறிக்கையில் (Global Monitoring Report) இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்களைச் சென்றடைதல் (Reaching the Marginalised) என்ற தலைப்பிலான அறிக்கை கெவின்வாட்கின்ஸ் என்பவரை ஆசிரியராகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

வறியநாடுகளின் ஆரம்பக்கல்விக்குப் போதுமான நிதியுதவியை வழங்குவதற்கு தனவந்த நாடுகள் கூட்டாகத் தவறியிருக்கின்றன.அத்துடன்,வழங்குகின்ற நிதியையும் மிகைப்படுத்தியே வெளியுலகிற்கு இந்தத் தனவந்த நாடுகள் கூறுகின்றன என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் சபை மிலேனியம் அபிவிருத்தி செயற்றிட்டங்களைத் தயாரித்திருந்தது.இந்தச் செயற்றிட்டங்களில் வரையறுக்கப்பட்ட இலக்குகள் அநேகமாக 2015 ஆம் ஆண்டளவில் எட்டப்படவேண்டுமென்றே தீர்மானிக்கப்பட்டது. மிலேனியம் அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் ஆரம்பக் கல்வி தொடர்பில் 2015 ஆம் ஆண்டளவில் எட்டப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதிலிருந்து மிகவும் பயங்கரமான அளவுக்குத் தொலைவிலேயே இருக்கிறோம் என்று கெவின் வாட்கின்ஸ் கூறியிருக்கிறார்.

பால்நிலை வேறுபாடு உட்பட அக்கறைக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரங்கள் தொடர்பில் தற்போதைய உலகளாவிய நிலைவரத்தை யுனெஸ்கோவின் இந்த அறிக்கை தெளிவாக விளக்கியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

(2ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ச்சில் புகைத்த சுருட்டு ஏலத்திற்கு வருகிறது



இரண்டாவது உலகப்போர் நடந்த சமயத்தில் பிரிட்டனின் பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில். பிரிட்டன் மீது மிகப் பயங்கர மான விமானத் தாக்கு தல்கள் நடந்தபோதும் வெற்றி நமதே என மக்களுக்கு உற்சாகம் ஊட்டியவர் சேர்ச்சில்.

சுருட்டுப் பிடிக்கும் பழக்கம் உள்ள அவர் தமிழகத்தில் தயாரிக் கப்பட்ட சுருட்டுகளை விரும்பிப் புகைத்தார் என்றும் கூறப்படுவ துண்டு. அவர் சுருட்டைப் பற்றவைத்த பிறகு பாதியில் போட மாட்டார். அந்தச் சுருட்டை எதுவரை புகைக்க முடியுமோ அந்தளவு புகைத்துவிட்டுத்தான் அணைப்பார். கடந்த 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி பற்றவைத்த சுருட்டை முழுக்க புகைக்க முடியாமல் பாதியில் அணைத்தார். அன்று தான் ஜேர்மன் படை லெனின்கிராட்டு நகருக் குள் நுழைந்தது.

சோவியத் படை வீராவேசத்தோடு ஜேர் மன் படையை எதிர்த்துப் போராடியது. அது பற்றி விவாதிக்க அவசரமாகப் பிரிட்டனின் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

பிரதமரே போர்ச்சூழலில் அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தாமதமாகப் போக முடியுமா? அதனால் பற்றவைத்த சுருட்டை பாதியில் அணைத்துவிட்டார். அப்பொழுது சேர்ச்சி லின் உதவியாளராக இருந்த நெல்விகோ பில், அதைப் பாதுகாத்து வந்தார். அந்தச் சுருட்டை கீஸ் என்னும் நிறுவனம் ஏலத்தில் விடத் திட்டமிட்டுள்ளது. அது ரூ.72 ஆயிரத் துக்கு விற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சனிக்கிழமை பிரச்சினை




தன் மீது அக்கறை காட்டாமல் வேண்டாவெறுப்புடன் நடந்துகொள்ளும் மனைவியை கணவன் மனநல வைத்தியரிடம் அழைத்துச் சென்றார்.

நோயாளியிடம் சில நிமிடங்கள் அந்த டாக்டர் பேசினார். பின்னர் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டார். ஒரு தடவையல்ல. பல தடவைகள்.

உங்கள் மனைவிக்கு இது போன்ற சிகிச்சை தான் தேவைப் படுகிறது. ஒன்றுவிட்ட ஒரு தினம் இத்தகைய சிகிச்சையை அளிக்கவேண்டும். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வியா ழக்கிழமையும் சனிக்கிழமையும் சிகிச்சை அளித்தால் நல்லது என்று டாக்டர் கணவனைப் பார்த்துக் கூறினார்.

கணவரின் பதில்-ஒகே டாக்டர்.அதில் பிரச்சினையில்லை. நீங்கள் சொல்வதைப் போன்று சிகிச்சை அளிக்கலாம். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் மனைவியை உங்களிடம் அழைத்துவர என்னால் முடியும். ஆனால் சனிக்கிழமை அழைத்து வருவதில்தான் எனக்குப் பிரச்சினை. ஏனென்றால் எனது நண்பர்களுடன் சதுரங்கம் விளையாடுவதற்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் நான் செல் வது வழக்கம்!

# மஞ்சள் காமாலை



**நோயாளி:** டாக்டர், எனக்கு மஞ்சள் காமாலை என்று நிச்சயப்படுத்திக் கூறுகிறீர்களா? ஒரு டாக்டர் நோயாளிக்கு மஞ்சள் காமாலைக்கு வைத்தியம் செய்து அந்த நோயாளி வேறு ஏதோ நோயினால் மரணமடைந்ததாகக் கேள்விப்பட்டி ருக்கிறேன்.

**டாக்டர்:** நீங்கள் எதற்கும் கவலைப்படவேண் டாம். நான் மஞ்சள் காமாலை நோய்க்கு சிகிச்சை யளிக்கும் போது நோயாளிகள் அந்த நோயினா லேயே மரணமடைகிறார்கள்.

**பள்ளி...**

(முன்பக்கத் தொடர்ச்சி)

தற்போது காணப்படுகின்ற நிலைவரத்தில் மாற்றங்க ளைச் செய்வதற்கு உருப் படியான நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் 2015 அளவில் உலகில் சுமார் 5 கோடி 60 இலட்சம் சிறுவர் கள் ஆரம்பப் பாடசாலைக் குச் செல்லாமல் வீடுகளில் முடங்கிக் கிடக்கவேண்டிய நிலை தோன்றும்.இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பு கள் இழக்கப்படும்.வறுமை ஒழிப்புக்கான முயற்சிகள் பாரதூரமான அளவுக்கு பின் னடைவைக் காணும்.சுகாதார நிலைப்பாடும் மோசமானதாக மாறும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை பெரும் கவலை யைத் தருவதாக இருக்கி றது.சர்வதேச நிதிநெருக்க டியின் விளைவுகள் வறிய நாடுகளைப் பாரதூரமாகப் பாதிக்கத் தொடங்கியிருப் பதை நாம் காண்கிறோம் என்று கெவின் வாட்சின்ஸ் கூறியிருக்கிறார்.பள்ளிப் படிப்பை இடைநடுவில் கைவிட்டிருக்கும் சிறுவர்க ளின் தற்போதைய என் ணிக்கையைப் பொறுத்த வரை 54 சதவீதமானவர்கள் சிறுமிகளாகவே இருக்கிறார் கள் என்று குறிப்பிடத்தக்கது. ஆபிரிக்காவின் தெற்கு ...ராந்திய நாடுகளே கூடுதலா கப் பாதிக்கப்படப் போகின் றன.அந்த நாடுகளில் நிதிப்பற்றாக்குறை அதிகரித் துக்கொண்டிருக்கும் நிலை யில் கல்விக்கான செலவி னங்களில் வேதனைக்கு ரிய முறையில் குறைப்புச் செய்யப்பட இருக்கிறது. வறிய நாடுகளுக்கே உறு தியளித்த அடிப்படைக் கல்விக்கான நிதியுதவியை வழங்குவதில் தனவந்த நாடுகள் 2004 ஆம் ஆண் டில் இருந்து அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்து வருவதைக் காணக்கூடிய தாக இருக்கிறது.

இந்த நிதியுதவிகளை அடுத்த 5 வருடங்களில் துரிதமாக வழங்குமாறு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் உதவி வழங் கும் நாடுகள் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்திருக் கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 'நடிகர் திலக' திருடர்கள்



நாட்டில் யுத்தம் ஓய்ந்து சற்று நிம்மதியான சூழல் தோன்றியிருக்கின்றது என்ற நினைப்புடன் வாழ்ந்து வரும் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் வரும் நடிகர் திலக திருடர்களினால் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தென்பகுதிகளிலிருந்து வரும் இத்தகைய ஆசாடபூதிகள் பல்வேறு வேடங்களில் வீடுவீடாகச் சென்று திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

தாங்கள் குடாநாட்டு வாசிகள் என்றும் இதுவரை காலமும் வன்னி நலன்புரி முகாம்களில் வசித்துவந்தோம் என்றும் கூறும் இத்தகைய திருடர்கள் தமக்கு உதவுமாறு கோரி தந்திரமாகப் பணம் பறித்தல் மற்றும் பொருட்களைக் கொள்ளையடித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பிற மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வேலை பார்த்துவரும் ஆண் துணையின்றிய குடும்பங்கள் மற்றும் பிள்ளைகளின் துணையின்றி தனிமையில் வாழ்ந்துவரும் வயது முதிர்ந்த பெற்றோர்கள் இத்தகையவர்களின் ஏமாற்று நடவடிக்கைகளுக்கு இலக்காகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீடுகளுக்குச் செல்லும் இத்தகைய திருடர்கள் முதலில் தம்மை மிகவும் அப்பாவிகள் போன்றதொரு தோரணையில் காட்டிக்கொள்வதாகவும் கைநிறையவில்லை என்றால் வீட்டுக்காரரிடம் கைவரிசையைக் காட்டி கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் குடாநாட்டிலுள்ள வயோதிபமாது [தனிமையில் வாழ்ந்து வருபவர்] ஒருவரின் வீட்டுக்குச் சென்ற திருடன் ஒருவன், தான் ஒரு அகதிமுகாமில் உள்ளவரென்றும் தனக்கு பல குழந்தைகள் இருக்கின்றதென்றும் தனது வேதனையைக் கொட்டி உதவுமாறு கோரிய போது, அவர் மீது பரிதாபங்கொண்டு வீட்டுவராந்தாவில் இருத்தி உணவு உட்கொள்ளக் கொடுத்து விட்டு இரு 'ரீ' போட்டுத் தருகிறேன் என்று கூறி உள்ளே 'ரீ' போடச் சென்ற அந்நேரம் பார்த்து வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருட்களை அடித்துக்கொண்டு அந்தத் திருடன் மாயமாகி விட்டதாகவும் மூதாட்டி கண்ணீர் மல்க தனது கவலையை வெளியிட்டார்.

இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் இலைமறை காயாக நடந்துவருகின்றபோதும் இவை ஊடகங்கள் வாயிலாகவோ வேறு வழிகளிலோ அதிகளவில் வெளிப்படுத்தப்படாமல் போவது வேதனை தரும் விடயமாக அமைந்திருக்கின்றதென்று முதியவர் ஒருவர் கவலை தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வீடுகளுக்கு சென்று இத்தகைய நடிப்பு பாணியிலான திருட்டுக்களை அரங்கேற்றி வருவோரின் அட்டகாசம் ஒருபுறமிருக்க ஆலயங்கள், வரலாற்று இடங்கள் மற்றும் பொது இடங்களில் பாதுகாக்கப்பட்டு வரும் கிடைத்தற்கரிய பழைமை வாய்ந்த பொருட்களைத் திருடிச் செல்வோரின் அட்டகாசம் மற்றொரு தலையிடியாக அமைந்திருப்பதாகவும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

ஆலயங்களுக்குள் பிரவேசிக்கும் இத்தகைய திருட்டு நபர்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கும் மூல விக்கிரகங்கள் உட்பட முதுசங்களாகப் பேணப்பட்டு வரும் பித்தளை, செப்பு மற்றும் ஐம்பொன்களிலான பெறுமதி மிக்க பொருட்களைக் களவாடிச் செல்வதாகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் தற்போது ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருப்பது இத்தகையவர்களின் நடமாட்டத்திற்கும் திருட்டு நடவடிக்கைகளுக்கும் பெருஞ்சாதகமாக அமைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டும் பொதுமக்கள் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருக்க பொலிஸாரும் நீதித்துறையினரும் கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றனர்.

இதற்காக கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களில் விழிப்புணர்வுக் குழுக்களை அமைத்து இவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செ.சக்திதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆறு வருடங்களுக்கு தமிழ் மக்களின் வாழ்வியலையும் தலைவிதியையும் தீர்மானிக்கப்போகின்ற தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகளே யார் ஜனாதிபதி என்பதைத் தீர்மானிக்கின்றன. ஜனாதிபதி மகிந்தவுக்கு முன்னர் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க சமாதானத் தேவதையாகத் தன்னைப் பிரகடனப்படுத்தி தமிழ் மக்களுக்கு முன் தோன்றியதன் மூலம் தமிழ் மக்களின் அமோக வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகியவர்.

திருமதி சந்திரிகா தன்னுடைய முதல் ஆறு வருட காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சில சுற்றுப் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தார்.அதை நம்பிய மக்கள் இரண்டாவது தடவையாகவும் அவரையே ஜனாதிபதியாக்கினர்.

அதற்கடுத்ததாகத் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் தமிழ் மக்களே ஜனாதிபதியாக்கினார்கள். 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெற்றியடையக்கூடிய நிலையில் இருந்த போதும் தமிழ் மக்கள் அந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்ததன் காரணமாகவே மகிந்த ஜனாதிபதியானார்.

ஆனால், முன்னைய எந்தவொரு ஜனாதிபதியினது ஆட்சிக் காலத்திலும் தமிழ் மக்கள் அனுபவித்திராத துன்ப துயரங்களையும் அழிவுகளையும் உயிரழப்புகளையும் மகிந்தவின் ஆட்சிக் காலத்திலேயே தமிழர்கள் அனுபவித்தார்கள என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய எதிரணிக் கட்சிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஜனாதிபதி மகிந்த தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்க மாட்டாரென்ற காரணத்தாலேயே தாங்கள் எதிரணி வேட்பாளர் பொன்சேகாவை ஆதரிப்பதாகவும் தமிழ்க்கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் யாழ்.,மாவட்டத்தில் தற்போது தேர்தல் பிரசாரங்கள் களை கட்டியுள்ளன.தென்னிலங்கை போன்று வன்முறைகளோ அச்சுறுத்தல்களோ இல்லாத நிலையில் இங்கு பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பான்மை இனக் கட்சிகளான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றின் ஆதரவாளர்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்கின்றனர். இந்தப் பிரசாரத்திற்காக தமது 18 அலுவலகங்கள் குடாநாட்டில் திறக்கப்பட்டிருப்பதாக மக்கள் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திலக் உடுகம தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளும் தமது பிரசாரங்களை முன்னெடுத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் கூட்டமைப்பு பொன்சேகாவிற்கு ஆதரவாகவும் ஈ.பி.டி.பி. மகிந்தவுக்கு ஆதரவாகவும் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்டத்தில் இதுவரை பெரியளவிலான பிரசாரக் கூட்டங்கள் எதனையும் நடத்தாத போதிலும் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொன்சேகாவை வெற்றி



பெறச் செய்யுமாறு கோரும் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை தமது ஆதரவாளர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வருகின்றனர். ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட ஆதரவாளர்களும் பொன்சேகாவிற்கு ஆதரவாகத் தீவிர பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்குபற்றுகின்ற அனைத்துக் கூட்டங்களிலும் ஜனாதிபதி மகிந்தவை வெற்றிபெறச் செய்யுமாறு பிரசாரம் செய்கின்றார்.

ஆயினும் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற யாழ்.மாநகர சபைத் தேர்தலின் போது மேற்கொள்ளப்பட்ட தீவிர பிரசாரத்தைப் போல இந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்போ ஈ.பி.டி.பி.யோ பிரசாரத்தில் ஈடுபடவில்லை.

யாழ்.மாநகர சபைத் தேர்தலின் போது கூட்டமைப்பின் ஆதரவுத் தளமான நல்லூர்த் தொகுதி உட்பட சில தொகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத நிலையிலும் கூட்டமைப்பு எதிர்பாராத வகையில் அதிகளவான வாக்குகளைப் பெற்றிருந்தது. யாழ்;மாநகர சபையைத் தாங்கள் கைப்பற்றிய போதிலும் கூட்டமைப்பின் வாக்கு வித்தியாசத்தை உணர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் தனக்குத் தோல்வி என்பதை வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டிருந்தார்.

ஆனால், இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவாளர்கள் அனைவரும் தங்களுடைய வேண்டுகோளை ஏற்று சரத் பொன்சேகாவிற்கு வாக்களிப்பார்களென்று கூட்டமைப்பு எம்.பி.க்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தேர்தலுக்கான இறுதிக் கட்டப் பிரசாரங்கள் தற்போது குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இதுவரை குழப்பமான நிலையிலிருந்த யாழ்.மக்கள் தற்போது முற்றுமுழுதாக இல்லாவிடினும் தெளிவொன்றுக்குள் வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.பெருமளவான மக்கள் ஆட்சி மாற்றமொன்றின் அவசியத்தை வலியுறுத்துவதையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் உதவிப் பொருட்கள் உறுதிமொழிகள் வழங்குவதன் மூலம் மக்களின் வாக்குகளைக் கவரும் செயற்பாடுகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன.அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியின் பாரியார் திருமதி சிராந்தி ராஜபக்ஷ யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து பெண்களுக்கான உதவிப் பொருட்களை வழங்கியிருக்கின்றார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 1000 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளார். மேலும், விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களையும் அவர் வழங்கினார்.

உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம்,சுதந்திரமான நடமாட்டம் மற்றும் தொழில்கள்-வேலை வாய்ப்புகளை வழங்குதல் போன்ற உறுதிமொழிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.யாழ்.மாவட்டத்தில் 2,500 பேருக்கு மேலாக உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு உறுதிமொழிகளை வழங்குவதற்கு பலரும் முண்டியடிக்கின்றனர்.அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட எதிரணிப் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா மற்றும் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வேலையற்ற பட்டாதாரிகளுடன் நீண்ட நேரம் கலந்துரையாடிய போது தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் விரைவாக நியமனங்கள் வழங்கப்படுமென்று உறுதியளித்தனர்.சில நாட்களின் பின்னர் வந்த ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய பட்டதாரிகளைச் சந்தித்து உரையாடும்போது தாங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாதத்திற்குள் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

மேலும்,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு-தங்கராசா வேலையற்ற பட்டதாரிகள் 800 பேரின் பெயர் விபரங்களைக் கேட்டுக் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் அந்த 800 பேருக்கும் நியமனம் வழங்கப்படுமென்று உறுதியளித்ததாகவும் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு உறுதிமொழிகளை வழங்கியுள்ளார். எனினும் கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தப் பட்டதாரிகளைச் சந்திக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எது எப்படியிருக்கின்ற போதிலும் யுத்தம் நீங்கிய நிலையில் தமிழ் மக்களுக்கு நியாயமான நிலையான தீர்வை வழங்குதல்,வடக்கு-கிழக்கு உட்பட நாட்டைப் பூரணமாக அபிவிருத்தி செய்தல் போன்றனவே இன்று முக்கியமாக இருப்பதால் இவற்றைச் செயற்படுத்தக் கூடியவரையே தமிழ் மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'பூரணத்துவமான விதவை'

இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி திருமதி சோனியா காந்தியை 'பூரணத்துவமான ஒரு விதவை' (perfect window) என்று பொலிவூட் நடிகை பிரீட்டி சின்ரா வர்ணித்திருக்கிறார்.

உலகம் பூராகவுமுள்ள விதவைகளினதும் அவர்களின் பிள்ளைகளினதும் நலன்களுக்காகப் பாடுபடும் அமைப்பான (loomba trust) இன் நல்லெண்ணத் தூதுவராக 34 வயதான பிரீட்டி சின்ரா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சோனியா காந்தியை உதாரணமாகக் காட்டிய நடிகை விதவைகளுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் அவர்களினால் பெரும் சாதனைகளைச் செய்யமுடியும் என்றும் அவர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதற்குத் தன்னை அர்ப்பணிக்கப்போவதாகவும் கூறியிருக்கிறார்.


நல்லெண்ணத் தூதுவராக நியமனம் பெற்ற பின்னர் மும்பையில் இவ்வாறும் செய்தியாளர் மகாநாடொன்றில் உரையாற்றிய பிரீட்டி சின்ரா 'பூரணத்துவமான விதவைக்கு சோனியா காந்தி ஒரு சிறந்த உதாரணம். ஒரு பெண் விதவையாக இருந்தாலும் கூட அவளுக்கு வாய்ப்புகள் அளிக்கப்படுமேயானால் அவளால் பெரிய விடயங்களைச் சாதிக்கக் கூடியதாக இருக்கும். உலகின் எந்தப்பகுதியிலும் எந்தவொரு ஆணுக்கும் நிகராக பெண்களினால் சாதித்துக்காட்ட முடியுமென்பதற்கு சோனியாகாந்தியின் முன்மாதிரியே சான்றாகும்' என்று கூறினார்.

இந்தியாவில் பெண்களின் நல்வாழ்வுக்கான இலட்சியங்கள் எப்போதுமே எனது மனதுக்கு நெருக்கமானவை. பெண்களுக்கு சமுதாயத்தில் உரிய இடம் அளிக்கப்படவில்லை என்று நான் உணருகிறேன். சிறுவயதில் தந்தையை இழந்தவள் நான், அதனால் விதவைகளின் நலன்களுக்காகக் பாடுபடும் இலட்சியம் எனது மனதுக்கு நெருக்கமானதாகவே இருக்கிறது. பொருளாதார ரீதியில் திடமான ஒரு நிலையில் உள்ள குடும்பத்தில் இருந்து வந்தவள் என்பதால் நான் அதிர்ஷ்டக்காரி, அல்லது நான் என் வாழ்வில் பெரிதும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருந்திருக்கும் என்றாலும் கூட, ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இருக்கக்கூடிய கஷ்டங்களை விளங்கிக்கொண்டவளாகவே நான் வளர்ந்து வந்தேன். என்னால் பெண்களின் உண்மையான பிரச்சினைகளை நெருக்கமாக அடையாளம் காணமுடியும் என்றும் நடிகை செய்தியாளர்களிடம் கூறினார்.

பிரீட்டி சின்ராவுக்கு 13 வயதாக இருக்கும் போது அவரின் தந்தையார் இறந்துவிட்டார்.

வட இந்தியாவின் பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களில் ஒருவரான தீபா மெஹ்தாவின் சகோதரன் தயாரித்திருந்த 'மறக்கப்பட்ட பெண்கள்' (the for gotten women) என்ற விவரணத் திரைப்படம் என்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த விபரணத் திரைப்படத்தின் மூலமாக கூறப்பட்ட செய்தி என்னைப் பெருமளவுக்கு மாற்றியமைத்தது. விதவைகளுக்கு எமது சமூகத்தில் என்ன நேருகிறது என்பதை மிகவும் தத்ரூபமாக அந்தப் படம் வர்ணித்திருந்தது. loomba trust அமைப்பின் தூதுவராகப் பணியாற்றுவதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போது நான் என்றுமே நினைத்திராத ஒரு வரத்தை கடவுள் எனக்கு அருளியிருக்கிறார் என்றுதான் நினைத்தேன் என்று பிரீட்டி சின்ரா தெரிவித்தார்.

## எதுவுமே செய்யாத பொஸ்



செல்லப்பிராணிகள் விற்பனை செய்யப்படும் கடையொன்றுக்கு நபர் ஒருவர் சென்றார். ஒரேமாதிரியாகத் தோன்றும் மூன்று கிளிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கூடு ஒன்றை அவருக்குக் கடையின் விற்பனையாளர் காண்பித்தார்.

இடதுபக்கத்தில் நிற்கும் கிளியின் விலை 500 ரூபா என்று விற்பனையாளர் சொன்னார்.

'என்ன ஒரு கிளிக்கு இந்தப் பெரிய விலையா' என்று நபர் கேட்டார்.

ஆம் ஆம், அந்தக் கிளிக்கு கம்பியூட்டரைப் பயன்படுத்தத் தெரியும். அதனால்தான் அந்த விலை-விற்பனையாளர் சொன்னார்.

மற்றைய கிளியைக் காட்டி அதன் விலை என்னவென்று வந்தவர் கேட்க, அது 1000 ரூபா என்று விற்பனையாளர் கூறினார்.

அந்தக் கிளி கம்பியூட்டர் துறையில் மேலும் பல நுட்பங்களைத் தெரிந்து வைத்திருக்கிறது. அதனால்தான் முன்னையதை விட அதற்குக் கூடுதல் விலையென்றும் விற்பனையாளர் சொல்லிவைத்தார்.

மூன்றாவது கிளியைக் காட்டி அதன் விலை என்னவென்று நபர் கேட்க, விற்பனையாளர் 2000 ரூபா என்றார். அதைக் கேட்ட நபர் அதிர்ச்சியடைந்தார். இந்தப் பெரிய விலையைக் கொடுப்பதற்கு அந்தக் கிளியில் மேலதிகமாக என்ன சிறப்பு இருக்கிறது என்று நபர் மீண்டும் கேள்வி கேட்டார்.

'நேர்மையாகச் சொல்கிறேன். அந்த மூன்றாவது கிளி எதையுமே செய்ததை நான் ஒருபோதும் பார்த்ததில்லை. ஆனால், ஏனைய இரண்டு கிளிகளும் அதையே 'பொஸ்' என்று அழைக்கின்றன. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்' விற்பனையாளரின் பதில் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராம பிரான் கிருபையுடன் காலநிலை மாற்றத்தின் பாதிப்பை தடுக்கும் இயக்கம்



'இராமபிரான், இராமாயணம், பூமிவெப்பமடைதல்' (Ram, Ramayana and Global Warming).

இச் சொற்தொடரைப் பார்க்கும் போது உங்களுக்கு ஒரு புதிராக இருக்கிறதல்லவா? வட இந்திய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனமொன்று காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படுகின்ற பாதிப்புகளை தடுப்பதற்காக முன்னெடுத்திருக்கும் செயற்திட்டத்திற்கு இவ்வாறு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

ரவுணாக் இவாம் ஜக்ருக் சமாஜ் சன்ஸ்தா ( REJSS) என்பதே அந்த அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனமாகும். மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் இருந்து சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சோன்பத்ரா மாவட்டத்தில் அது இயங்கி வருகிறது.

உத்தரப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்குச் சென்று தொண்டர் நிறுவனத்தின் பணியாளர்கள் இராமபிரானுக்கு வழிபாடுகளை நடத்தி இராமாயணப் பாராயணத்தையும் செய்து இறுதியில் பிரசாதமாக பக்தர்களுக்கு மரக்கன்றுகளை வழங்குகிறார்கள்.

சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் பூமி வெப்பமடைவதைத் தடுப்பதற்குமான எமது மத ரீதியான வழிமுறை என்று இதை நீங்கள் கூறலாம். பூமி வெப்பமடைவதற்குக் காரணமாக இருக்கும் பசுமை இல்லத்தாக்க வாயுக்களில் ஒன்றான காபனீரொட்சைட்டைக் குறைப்பதற்கு மரங்களை நடுவதென்பது எவராலுமே செய்யக் கூடியதொன்று தான் என்று REJSS ன் பணிப்பாளர் அரவிந்த் சிங் கூறுகிறார்.

இந்துக்களைப் பொறுத்தவரை பிரசாதங்கள் முக்கியத்துவமானவை. வழிபாடுகளுக்குப் பிறகு பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வது இந்துக்களின் பாரம்பரியமாகும். கடவுளினால் ஆசீர்வதிக்கப்பட்டதாக பிரசாதங்களை இந்துக்கள் நம்புகிறார்கள். வழமையாக பழ வகைகளையும் இனிப்புப்பண்டங்களையும் குறிப்பாக பஞ்சாமிர்தத்தையுமே பிரசாதமாக வழிபாட்டுத் தலங்களில் வழங்குவார்கள். நாம் பூசைகளின் இறுதியில் பக்தர்களுக்கு மரக்கன்றுகளை வழங்குகிறோம். அதை அவர்கள் பக்தி உணர்வுடன் ஏற்றுக் கொண்டு நடுகிறார்கள் என்றும் அரவிந்த் சிங் விளக்கமளித்தார்.

6 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 'இராமபிரான், இராமாயணம், பூமி வெப்பமடைதல்' செயற்திட்டத்தின் மூலமாக இதுவரை பக்தர்களுக்கு 18 ஆயிரத்துக்கும் அதிகமான மரக்கன்றுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

2009 ஜூனில் இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வாரணாசி, சண்டோலி, மிர்சாபூர் மற்றும் சோன்பத்ரா மாவட்டங்களில் மரக்கன்றுப் பிரசாதம் வழங்கும் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

'கடந்த ஐந்து வருடங்களாக நாம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்ச்சித் திட்டங்களை உத்தரப்பிரதேசத்தின் பல பாடசாலைகளில் ஏற்பாடு செய்தோம். சுற்றாடலைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் சாதாரண மக்களை எம்மால் ஈடுபடுத்த முடியாமல் போய்விட்டது. பின்னர் நாம் சுற்றாடலுடன் மதத்தைத் தொடர்புபடுத்தத் தீர்மானித்தோம். எமது நாட்டில் மக்கள் குறிப்பாக இந்துக்களின் மதத்தினால் ஆதர்சிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று மேற்படி தொண்டர் நிறுவனத்தின் உறுப்பினர்களில் ஒருவரான டிம்பிள் சிங் என்ற பெண்மணி கூறினார்.

முன்னரெல்லாம் சுற்றாடலில் பாதுகாப்புடன் தொடர்புடைய திட்டங்கள் எல்லாம் பாடசாலைகளுடன் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன. தற்போது அந்தத் திட்டங்கள் சமூகத்தின் சகல பிரிவினரதும் கவனத்தைக் கவரத் தொடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

மதஒன்றுகூடல்களை, பிரார்த்தனைகளை நாம் ஏற்பாடு செய்யும் போது சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்று சகல தரப்பினரும் வந்து கலந்து கொள்கிறார்கள். மரக்கன்றுகளை பிரசாதமாக வழங்கும் போது பக்தியுடன் ஏற்றுக் கொள்ளும் அவர்கள் அவற்றைக் கொண்டு போய் நட்டு வளர்க்கிறார்கள். அந்த மரங்களை எதுவிதத்திலும் அழியவிடாது பாதுகாக்க வேண்டுமென்பதில் மக்கள் தீவிர கரிசனை காட்டுகிறார்கள். இராமாயண பாராயணத்தின் பின்னர் வழங்கப்படும் மரக்கன்றுப் பிரசாதத்தை பயன்படுத்தினால் தங்களுக்கு இராமபிரானின் சாபம் கிடைத்து விடுமென்று அவர்கள் பயப்படுகிறார்கள் என்றும் அந்த தொண்டர் நிறுவனத்தின் பணியாளர்கள் இந்தோ ஆசியச் செய்திச் சேவையின் லக்னோ செய்தியாளரான அசித் ஸ்ரீ வஸ்தவாவிற்கு கூறியிருக்கிறார்கள்.

உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு மாத்திரமல்ல, இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கும் இந்தச் செயற்திட்டத்தை விஸ்தரிப்பது குறித்து பரிசீலனை செய்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மதத்தையும் விஞ்ஞானத்தையும் கலக்கும் இந்தச் செயற்றிட்டம் காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு உண்மையில் ஒரு தனித்துவமான திட்டமேயாகும் என்பதில் சந்தேகமில்லை.



## எனது பணத்தில் உனது குடும்பச் செலவு



வீதியால் சென்று கொண்டிருந்த பழக்கமான நபர் ஒருவரைப் பிச்சைக்காரன் இடைமறித்து 'சில வருடங்களுக்கு முன்னர் என்னைக் காணும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு 10 ரூபா தருவீர்கள். கடந்த வருடம் முதல் இதை 5 ரூபாவாகவும் இவ்வருடம் அதை ஒரு ரூபாவாகவும் குறைத்துவிட்டீர்களே ஏன்' என்று கேட்டான்.

'சில வருடங்களுக்கு முன்னர் நான் திருமணமாகாத இளைஞனாக இருந்தேன். கடந்த வருடம் நான் திருமணம் செய்தேன். இவ்வருடம் ஒரு குழந்தைக்கு நான் தந்தையாகிவிட்டேன்' என்று நபர் பதிலளித்தார்.

ஆத்திரமடைந்த பிச்சைக்காரன் உரத்துக் கத்தினான். 'உனது குடும்பச் செலவுக்கு எனது பணத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறாய்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையானது தற்போது டெங்கு நோய் தாக்கத்திற்கு உட்படும் நாடுகளில் ஒன்றாக காணப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் டெங்கு நோயினால் குறிப்பிட்டளவு எண்ணிக்கையான மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இவ் எண்ணிக்கையானது 2009 ஆம் ஆண்டில் பல மடங்காக அதிகரித்தது டன் வடபகுதி மாவட்டங்களான வவுனியா மற்றும் யாழ்ப்பாணமும் இந்நோயினால் பெருமளவு நோயாளர்களைக் கொண்டவையாக மாறியுள்ளன. நாட்டின் தென்பகுதியில் டெங்கு நோய் பெரும்பாலும் வருடத்தின் நடுப்பகுதியிலும் வடபகுதியில் வருடங்களின் இறுதி மற்றும் ஆரம்பகால கட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இது அவ்வப்பகுதியில் கிடைக்கும் மழை வீழ்ச்சியுடன் சம்பந்தப்பட்டது என்பது வெளிப்படை.

இம்முறை வவுனியா மற்றும் யாழ்.மாவட்டத்தில் டெங்கினால் பாதிக்கப்பட்ட அதிக நோயாளர்களும் டெங்கு நோயினால் அதிகளவு இறப்புகள் ஏற்பட அண்மையில் ஏற்பட்ட போக்குவரத்து தொடர்புகள் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. இதற்கு முன்னைய காலங்களில் வடபகுதி டெங்கு நோயினால் இவ்வாறு பாரதூரமாக பாதிக்கப்படவில்லை. ஆனால் இம்முறை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது மட்டுமல்லாது நோய் இறப்புகளும் மற்றைய மாவட்டங்களை விட அதிகரித்து காணப்படுவது இன்னொரு விடயமாகும்.

சாதாரணமாக ஒரு தொற்று நோய் அதிகளவில் ஏற்படும் போது அதனால் ஏற்படும் இறப்புப் பற்றி ஆராய்தல் முக்கியமானது. இவ்வாறான சூழலில் இறப்புகளின் அளவை அளப்பதற்கு நோய் இறப்பு வீதம் (Case Fatality Rate) பயன்படுத்தப்படுகிறது. அதாவது நோயால் பாதிக்கப்பட்டவர்களில் எத்தனை பேர் இறக்கிறார்கள் என்பதே. டெங்கு நோய்க்கான இவ்வீதம் மற்றைய மாவட்டங்களில் ஒன்றுக்கு குறைவாகக் காணப்பட்ட போது அண்மைக்கால யாழ்ப்பாண டெங்கு நோய் தாக்கத்தின் போது இவ்வீதமானது மூன்றிலும் கூடுதலாக காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

முதன்மைக் காரணம் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பலபேர் மாவட்ட சுகாதார தொற்று நோய் தடுப்புப் பிரிவுக்கு தெரியப்படுத்தப்படாமை, ஒரு தொற்றுநோய் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின் அந்நோயின் பெருக்கத்தை தடுக்க சுகாதார அதிகாரிகளுக்கு அத்தொற்று நோயினைப் பற்றி அறிவித்தலானது சட்டத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவத்துறை சார்ந்த சகலரதும் கடமையாகும். நோயினால் தாக்கப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இவ் விபரங்களை ஆராய்வதன் மூலம் தான் நோயின் புதிய பரிமாணங்களை அறிந்து அதற்கு ஏற்றவாறு நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகளை மாற்றியமைத்தல் வேண்டும்.

எனவே நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் மற்றும் இறந்தவர்கள் விபரங்கள் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்தல் முக்கியமானது. இதில் பல வெளி நோயாளர்கள் காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் குறைந்தளவு தாக்கத்துடன் நோய் ஏற்படும் போது அரச வைத்திய நிறுவனங்களை நாடுவதை விட அண்மையிலுள்ள தனியார் சிகிச்சை நிலையங்களை நாடுகின்றனர். ஆனால் இந்நிலையங்களில் இருந்து நோயாளர்கள் பற்றிய விபரம் சுகாதார அதிகாரிகளுக்கு கிடைப்பதில்லை. இது பற்றி பலரும் கவலையீனமாக செயற்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையை மாற்றி சகலரும் இந்நோயின் தாக்கம் பற்றி சுகாதாரத் துறையில் பிரதேச வைத்திய அதிகாரி (MOH)க்கோ அல்லது மாவட்ட தொற்று நோய்த் தடுப்பு மருத்துவ அதிகாரிக்கோ தெரியப்படுத்தல் அவசியம்.

மேற்கூறிய காரணம் மட்டுமல்லாது வேறு பல காரணங்களும் இவ்வாறானவை அதிகரித்த நோய் இறப்பு வீதத்திற்குக் காரணமாக அமையலாம். இன்னொரு காரணம் டெங்கு நோய்க்கான நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருத்தல். அதாவது சமூக மட்ட நோய் எதிர்ப்புத் தன்மை குறைவாக இருத்தல் காரணமாக அமையலாம். அல்லது தற்போது டெங்கு நோயை ஏற்படுத்தும் குறித்த வைரஸ் வகை வீரியம் கூடியதாக இருக்கலாம். நோயின் தாக்கும் தன்மை மற்றும் அறிகுறிகள் பக்கவிளைவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

நோயாளர்கள் தாமதித்து சிகிச்சை நிலையங்களை நாடுவது இன்னொரு காரணம். அதேநேரம் எல்லா நோயாளிகளும் காய்ச்சல் அறிகுறி ஏற்பட்டவுடன் அரச வைத்தியசாலைகளை நிரப்புவதும் இன்னொரு காரணம். இவ்வாறு எல்லோரும் பெரிய வைத்தியசாலைகளில் குவியும் போது இவ்வைத்தியசாலையிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் உண்மையான தேவையுடைய நோயாளிகளை கவனமாக பராமரிக்க முடியாது போகின்றது.

எனவே இன்றைய சூழல், சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்றவாறு சுகாதார சேவையின் அபிவிருத்தி துரிதமாக விருத்தி செய்யப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. நோயாக்கிகளின் தாக்கங்கள், அவற்றின் மாற்றங்கள், நோயின் தாக்கம், அவற்றின் மாற்றங்கள் என்பன பற்றி தொடர்ந்து ஆய்வுகள் செய்யப்படுதல் வேண்டும். நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய புதிய தரத்தில் கூடிய சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தை மட்டும் தங்கியிருக்காது இந் நடவடிக்கைகள் அரச, மக்கள், தனியார் கூட்டுபங்களிப்புகளின் மூலமே நாம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யமுடியும்.

இன்று உலகளாவிய ரீதியல் ஏற்படும் சூழலியல் மாற்றங்களுக்கு ஏற்றவாறு நாம் எம்மை தயார்படுத்தாவிடின் அவற்றின் தாக்கத்தினால் ஏற்படும் இறப்பின் அளவை குறைக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது என்பது கண்கூடு. எனவே துரிதமாகச் செயற்பட்டு பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து இவ்வாறான வசதியை ஏற்படுத்தக் கூடிய கட்டமைப்புகளை ஏற்படுத்தல் காலத்தின் தேவையாகும்.

**டாக்டர்**
**இ.சுரேந்திரகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர்களை விட செல்போனை கூடுதலாக நேசிக்கும் பெண்கள்

இன்று ஆணின் துணை யாருக்குத் தேவை? குறைந்தபட்சம் பெண்களுக்கு கூடத் தேவையில்லை என்று ஆகிவிட்டது போலும். ஏன் தெரியுமா?

பெண்கள் இப்போது பெரும்பாலும் செல்போன்களையே தங்களின் நெருக்கமான கூட்டாளிகளாகக் கருத ஆரம்பித்திருக்கிறார்களாம். அண்மையில் அவுஸ்திரேலியாவில் 4,000 பெண்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று சுவாரஸ்யமான சில விடயங்களை வெளிப்படுத்தியிருக்கிறது.

பத்து பெண்களில் நால்வர் ஒரு ஆணின் துணையில்லாமற் கூட தங்களால் வாழ முடியுமென்றும் ஆனால், செல்போன் இல்லாவிட்டால் வாழ்க்கையே தொலைந்த மாதிரியான உணர்வு ஏற்படுவதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தங்கள் செல்போன்களைத் தொலைக்கும் பெண்கள் காதலனைப் பிரிவதால் ஏற்படுகின்ற வேதனையையும் விடக்கூடுதலான வேதனைப்படுகிறார்கள் என்றும் புத்தி பேதலித்தவர்கள் போன்று காணப்படுவதாகவும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய போக்கு e-effect என்று பெண்களால் அழைக்கப்படுகிறது.

முன்னரைப் போன்று சகல விடயங்களுக்குமே ஆண்களை நம்பியிருக்கும் போக்கு பெண்கள் மத்தியில் தற்போது குறைந்து போவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பெண்களைச் சிறிய விடயத்துக்கும் உணர்ச்சிவசப்படுகின்ற பேதைகள் என்று பரவலாகக் கருதிவந்திருக்கிறோம். ஆனால், தற்போது அவர்கள் அத்தகையவர்களாக இல்லையென்று ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

பொலிவூட் கவர்ச்சி நடிகை நீது சந்ரா பின்வருமாறு கூறுவதாக இவ்வாரம் ரைம்ஸ் ஒஃப் இந்தியா பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

'தங்களது ஆண்துணையை விடவும் செல்போன்களுடன் பெண்கள் கூடுதல் நெருக்கமாக இருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பெண்கள் அவ்வாறு உணர்வதற்காக அவர்களைக் குறைகூற முடியாது. செல்போன் பெண்ணின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒரு கூட்டாளி. தேவையேற்படும் போது உதவிக்கு ஓடிவருகின்ற உண்மையான சிநேகிதம் போன்றதே செல்போன். அவை எமது இதயத்தின் வேதனைகளை ஏற்படுத்துவதில்லை என்பது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். ஆண்கள் அப்படியானவர்களா இல்லையே?'

இன்னொரு பொலிவூட் கவர்ச்சித் தாரகை கோனா மித்ரா இவர் சில தினங்களுக்கு முன்னர்தான் துருக்கிய விமான ஓட்டியும் வர்த்தகருமான மீற் மெறால் என்பவரைக் காதலிக்கத் தொடங்கியிருக்கிறார். கோனா மித்ரா என்ன கூறுகிறார் தெரியுமா?

'செல்போன்கள் தொடர்பாடல்களுக்கு அத்தியாவசியமானவை. உறவுமுறை என்று வரும்போது அவை ஒரு முன்தேவையாகவும் அமைகின்றன. ஒருவகையில் நோக்குகையில் செல்போன்கள் இல்லையென்றால் பெண்களுக்கு காதலனே இல்லாத மாதிரித்தான். எனது செல்போன்களைப் பல தடவைகள் நான் தொலைத்திருக்கிறேன். அதனால் எனக்கு ஏற்பட்ட பதற்றத்தையும் மன அழுத்தத்தையும் சொல்லில் வர்ணிக்க முடியாது. ஒரு செல்போன் இல்லையென்றால் பெண்களுக்கு வாழ்க்கையே இல்லாதமாதிரித்தான் நான் உணருவேன்'.

தனக்குப் பொருத்தமான



காதலனை நீண்டகாலமாகத் தேடிக்கொண்டிருந்த கோனா மித்ரா மேற்படி விமானியைக் காதலிப்பதற்கு செல்போனே பெரிதும் உதவியதாம்.

பணத்துக்காக உங்கள் காதலனைக் கைவிடத் தயாராகவிருக்கிறீர்களா என்று அவுஸ்திரேலிய ஆய்வில் பெண்களிடம் கேட்கப்பட்டது. ஏறத்தாள பலரிடம் இருந்தும் ஒரே மாதிரியான பதிலே வந்தது. 10 இலட்சம் டொலர்களுக்கும் அதிகமான பணம் தரப்படுமோனால் தங்களது காதலனைக் கைவிடுவது குறித்துப் பரிசீலிக்கத் தயாராக விருப்பதாக இவர்கள் கூறியிருக்கிறார்கள்.


பல பெண்கள் தங்களது வாழ்வில் முக்கியத்துவம் கொடுக்கின்ற விடயங்களைப் பொறுத்தவரை இன்று பாரிய [illegible] தாக ஆய்வின் முடிவுகள் மூலமாகத் தெரியவந்திருக்கிறது.

'காதலனை இழப்பதை விடவும் செல்போனை இழப்பது பெண்களைப் பொறுத்தவரை பெரும் மன அழுத்தத்துக்குரிய விவகாரமாகப் போய்விட்டது. வாழ்வில் ஒரு ஆணைவிடவும் செல்போன் பெண்களைப் பொறுத்தவரை நிரந்தரமான உறவாகிவிட்டது. நான் எனது செல்போனை ஒரு போதுமே தொலைத்ததில்லை. எனது உயிரைப் போன்று அதைப்பாதுகாத்துவருகிறேன். செல்போனைத் தொலைப்பேனாக இருந்தால் எனது தலையே வெடித்துவிடும்- இவ்வாறு கூறியிருக்கிறார். மிருணாளினி சர்மா என்ற பொலிவூட் நடிகை.

ஆண் இன்றி பெண்களால் வாழ முடியும். ஆனால் செல்போன்களின்றி அவர்களால் வாழ முடியாது. ஆண்களை விடவும் பெண்கள் வாயாடித்தனம் கொண்டவர்களாக இருப்பதே இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். எனவே பெண்கள் மத்தியில் பெருமளவில் தொடர்பாடலுக்கான தேவையிருக்கிறது. செல்போன்களுடன் நெருக்கமானவர்களாகத் தங்களைப் பெண்கள் உணருகிறார்கள். செல்போன்கள் இன்று தொடர்பாடலுக்கான சிறந்த சாதனமாக மாறிவிட்டன என்று கூறுகிறார். இந்திய உளநோய் நிபுணர் பிரபாகர் கோரடா.

பொலிவூட் நடிகை சமீரா ரெட்டி கூறுகிறார்; எனது செல்போனை ஒரு தடவை நான் தொலைத்தேன். எனக்கு அது பெரிய இடர் போன்று இருந்தது. தற்போது காதலர்களைவிடவும் செல்போன்கள் கூடுதல் பயனுடையவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியாவில் அதிகரிக்கும் செயற்கை பிரசவங்கள்

உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதும் மேற்கொண்ட கணக்கெடுப்பில் ஆசிய நாடுகளில் செயற்கைப் பிரசவம் (சிசேரியன்) அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டுகளில் மட்டும் செயற்கைப் பிரசவம் 27 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைப் பிரசவ வலி என்பது அத்தாய்க்கு மரண வாயிலை எட்டிப்பார்த்து விட்டு வருவதற்கு ஒப்பானதாகக் கருதப்பட்டும் போற்றப் பட்டும் வந்த நிலையில் தற்போதைய தாய்மார்கள் பிரசவ வலியென்றால் என்னவென்றே தெரியாமல் குழந்தைகளைப் பிரசவிக்கும் செயற்கை பிரசவம் (சிசேரியன்) முறைகளை அதிகளவில் நாடி வருகின்றனர். இவர்களில் இலங்கை அன்னையர்களும் அதிகளவில் இடம்பிடித்துள்ளனர்.

தாய் குழந்தையை பிரசவிக்கும் போது கணவனும் அருகிலிருக்க வேண்டும். அப்போதுதான் மனைவியின் பிரசவ வேதனையை உணர்ந்துகொள்ள முடிவதுடன் மனைவி மீதான கணவனின் பாசம், பராமரிப்பு, விட்டுக்கொடுக்கும் தன்மைகள் அதிகரிக்குமென்ற வகையில் பிரசவ நேரங்களில் கணவனும் அருகிலிருக்க மருத்துவ மனைகளில் அனுமதிக்கப் பட்டு வருகின்றது.

ஆனால், இவற்றுக்கெல்லாம் முடிவுகட்டுவது போல் செயற்கை முறைகளில் வலுக்கட்டாயமாக குழந்தைகளை பிரசவிக்கவே தற்போதைய நவீன அன்னையர்கள் அதிகம் விரும்புகின்றனர். பிரசவ வலிக்குப் பயம், விரும்பிய நாள், நேரம், திகதியில் குழந்தையைப் பிரசவிக்க முடியும் என்பன போன்ற காரணங்களினாலேயே இந்த செயற்கைமுறை பிரசவத்துக்கு தற்போது மவுசு கூடியுள்ளது.

இந்த செயற்கை முறைப் பிரசவத்துக்கு பணத்தாசை பிடித்த டாக்டர்களும் ஊக்குவிப்பு வழங்குகின்றனர். சுகப்பிரசவமாகக் கூடியதைக் கூட ஏதோ சிக்கல்கள் இருப்பது போல் காட்டி செயற்கை பிரசவத்துக்கு அத்தாயை தூண்டுகின்றனர். இந்த செயற்கை பிரசவத்துக்காக ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து பல பக்கேஜுகள் பல இலட்சம் ரூபாவரை இருக்கின்றன.

சாதாரண மருத்துவ மனைகளில் ஒரு சில ஆயிரம் ரூபாவுடன் சுகப் பிரசவமாக வேண்டிய குழந்தைகள் இலட்சக்கணக்கான ரூபா செலவுடன் கத்தி முனையில் வயிறு கிழிக்கப்பட்டு பயங்கரமான முறையிலேயே வெளி உலகத்தை பார்க்க வைக்கப்படுகின்றன. தனியார் மருத்துவமனைகளே இந்த செயற்கை முறை பிரசவங்களை ஊக்குவித்து தமது பிழைப்பை பெருப்பித்துக்கொள்கின்றன.

இவ்வாறான செயற்கை முறை பிரசவம் தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் மார்ட்டின் கில்ம் ஜோர்ஜ் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆசிய நாடுகளில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் உலக சுகாதார நிறுவனம் சார்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பெரும்பாலான தனியார் வைத்திய சாலை டாக்டர்கள் அதிக பணம் சம்பாதிக்கும் ஆசையில் தேவையே இல்லாமல் சிசேரியன் (செயற்கை பிரசவம்) செய்து விடுகிறார்கள். சிசேரியனை விட சுகப்பிரசவம்தான் நல்லதென்பது பல அன்னையர்களுக்கு புரிவதில்லை.

சிசேரியன் செய்யும் தாய், குழந்தைக்கு நிறைய பிரச்சினைகள் வரவாய்ப்புள்ளது. சில தாய்மார்களுக்கு கருப்பையை அகற்றவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. டாக்டர்கள் பலர் பண ஆசையில் தங்களது மனச்சாட்சியை அடகுவைத்து விடுகிறார்கள். மனிதாபிமானமுள்ள டாக்டர்கள் யாரும் தேவையேயில்லாமல் சிசேரியன் செய்யமாட்டார்கள்.

சில பெண்களுக்கு பிரசவ நேரம் காலதாமதமானால் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படும். அப்போது சிசேரியன் செய்வதைத் தவிர வேறுவழியில்லை. ஆனால், சுகப்பிரசவம் ஆகக்கூடிய நிலையிலுள்ள பெண்களுக்கும் சிசேரியன் செய்து குழந்தையை வெளியே எடுப்பதுதான் மிகவும் கொடூரமானது, வேதனைப்படக்கூடியது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக ஓடும் பூச்சி



உளர்கதை, உறவுக்கதை எல்லாம் பேசுவதை விட உலகக் கதை பேசலாம். அல்லது உலக விடயங்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம். அதுதான் இந்தக் காலம் மிகவும் நல்லது.

இந்தியாவின் மிக உயரமான ரயில் நிலையம் குங் ரெயில் நிலையம்.

பிரான்ஸ் நாட்டில் உள்ள பிரபலமான ஈபில் டவரை வடிவமைத்தவர் கஸ்டவ் ஈபில். அவர்தான் அமெரிக்காவில் உள்ள சுதந்திரதேவி சிலையையும் வடிவமைத்தவர்.

உலகில் மிக அதிக மக்களால் பேசப்படும் மொழி சீன மொழியான மண்டாரின். (மக்கள் தொகையில் முதலிடத்தில் இருக்கிறதல்லவா)

உலகிலேயே மிக வேகமாக ஓடும் பூச்சி இனம் கரப்பான் பூச்சி. ஒரு கரப்பான் பூச்சி மணிக்கு 4.28 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும்.

உலகிலேயே முதன் முதலில் இங்கிலாந்தில் தான் எட்வேர் பாரீஸ்டன் தெருக்களிடையே 1863 இல் பாதாள ரயில் விடப்பட்டது.

உலகில் அதிக வேகமாக காற்று வீசக்கூடிய பகுதி அண்டார்டிகாவின் கொமன்வெல்த் பே.

பிலிப்பைன்ஸ் நாட்டுக் கடலில் 1934 ஆம் ஆண்டு உலகிலேயே மிகப்பெரிய முத்துக் கிடைத்தது. அதன் நீளம் 24 சென்ரிமீற்றர், விட்டம் 14. செ.மீ.

வெள்ளை மாளிகையில் வசிக்காத ஒரே அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன்.

ஷேக்ஸ்பியர் எழுதிய கடைசி நாடகம் 'தி டெம்பஸ்ட்'

76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் வால் நட்சத்திரம் ஹாலி.

## குறுக்கெழுத்துப்போட்டி - 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | 7 | ■ | 8 | 9 | 10 |
| ■ | 11 | 12 | 13 | ■ | ■ |
| 14 | ■ | 15 | 16 | ■ | 17 |
| 18 | 19 | ■ | ■ | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | ■ | 26 |

**இடமிருந்து வலம்**

1. இதனை ஆயிரம் காலத்துப் பயிர் என்பர்
6. இது இல்லாத கடல்களே இல்லை (திரும்பியுள்ளது)
8. மனைவி என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
11. இலங்கையில் இலவசமாக வழங்கப்படுவது (குழம்பியுள்ளது)
15. பகலிலும் காணமுடியும் (திரும்பியுள்ளது)
18. சூழல் மாசடைவதற்கு இதுவும் பிரதான காரணம்
20. எலிகள் தங்கியிருக்கும் இடம் (திரும்பியுள்ளது)
27. சொர்க்கத்தின் எதிர்ச்சொல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. பெறுமதி
2. இனிப்பான தின்பண்டமொன்று (குழம்பியுள்ளது)
4. நாட்டுப்புற நடனம் (குழம்பியுள்ளது)
5. அன்னை என்றும் சொல்லலாம்
12. கேள்வி
14. கீர்த்தி என்றும் கூறுவர் (குழம்பியுள்ளது)
17. காடு (குழம்பியுள்ளது)
19. பெண்களுக்கு பிடித்த பொருள் (தலைகீழ்)

பெயர் : ........................................

முகவரி : ........................................

........................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 15 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. நல்லூர் | 1. நதி |
| 5. பூ | 2. கல் |
| 6. கதிரவன் | 3. பலூரன் |
| 11. பணம் | 4. வர்மம் |
| 14. சகி | 10. ரணம் |
| 16. காமம் | 14. கியூபா |
| 19. யூரோ | 15. ரோசம் |
| 22. பாம்பு | 18. காகம் |
| 25. சிம் | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**இ.தயாளினி,**
தூசையப்பர் ஆலய வீதி,
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

**பாராட்டுப்பெறுவோர்**

01. நசிக்குமார் ஜயந்தன்,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

02. ஏ.கபீர்த்தன்,
இல. 620, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

03. நா.சுந்தரலிங்கம்,
தொட்டிலடி மத்தி.,
சண்டிலிப்பாய்.

04. ம.க.ஸ்ரீதரன்,
இல. 24, சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

05. வே.குமாரசாமி,
கட்டைவேலி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

*உங்கள் விடைகளை*
*'Saturday மெயில்'*
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
*என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...*




## நிலத்திற்குள் பூக்கும் பூ

ஆர்க்கிட் குடும்பப் பூக்கள் விதவிதமான வடிவங்கள், வண்ணங்களில் இருக்கும். அவை செடியின் தண்டுப் பகுதி, கிளைகள், மரங்கள், தரை, பாறைகளிலும் கூடப் பூக்கும். மேற்கு அவுஸ்திரேலியாவில் காணப்படும் ஒரு 'ஆர்க்கிட்' மட்டும் தரைக்கு அடியில் வளர்ந்து பூக்கிறது. அது எப்போதும் தரைக்கு மேலே எழுவதே இல்லை.

இந்த 'ஆர்க்கிட்' வளரத் தொடங்கும்போது இதற்குக் கீழே உள்ள நிலம் விரிசலடைகிறது. அந்த விரிசலுக்கு உள்ளேயே இந்த 'ஆர்க்கிட்' வளர்ந்து பூக்கள் பூக்கிறது. இது வெளியிடும் மெல்லிய வாசனையால் வண்டினங்களும் கறையான்களும் நிலத்தடிப் பூக்களை வந்தடைகின்றன.

அவையே இந்த 'ஆர்க்கிட்'டின் அயல் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகின்றன. அயல் மகரந்தச் சேர்க்கைக்குக் கறையான்களின் உதவியைப் பெறும் ஒரே தாவரம் இது தான்.

## தெரிந்துகொள்ளுங்கள்!

நோபல் பரிசு வென்ற முதல் பெண்மணி கியூரி அம்மையார்.

குங்குமப் பூவை அதிகம் விளைவிக்கும் நாடு ஸ்பெயின்.

சந்திரனின் ஒளி 1 1/2 நிமிடத்திலும் சூரிய ஒளி 8 நிமிடம் 20 விநாடியிலும் பூமியை வந் தடைகின்றன.

அதிக ஞாபக சக்தி உள்ள விலங்கு யானை.

கொசுக்கள் இல்லாத நாடு பிரான்ஸ்

## விடுகதை

1. சின்னச் சின்ன சாத்தான் வயிறு பெருத்துச் செத்தான். அவன் யார்?
2. சின்னக் குதிரைக்கு நூறு கடிவாளம் அது என்ன?
3. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?
4. குதிரை ஓட, ஓட வால் குறைகிறது அது என்ன?
5. ஓடுமாம், சாடுமாம் ஒற்றைக் காலில் நிற்குமாம் அது என்ன?
6. கால் இல்லாத மான்; வேர் இல்லாத புல்லைத் தின்னும் அது என்ன?
7. கால் நான்கு நடக்காது, கண் ஆயிரம் இமைக்காது அது என்ன?
8. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல, சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல. அது என்ன?
9. டாக்டர் வந்தார், கோட்டைக் கழற்றினார் கேணிக்குள் குதித்தார்! அது என்ன?
10. மேலே பூப்பூக்கும், கீழே காய்காய்க்கும் அது என்ன?

1. பருத்திக் கொட்டை
2. தறி
3. மிளகாய்
4. ஊசியும், நூலும்
5. கதவு
6. மீன், பாசி
7. கட்டில்
8. கண்ணாடி
9. வாழைப் பழம்
10. வேர்க்கடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய சுவை...

# குறும்பில் ஒளித்திருக்கும் குறும்புகள்

மன்னை மகா

உலகில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் மனித வாழ்க்கையில் சீரிய வெளிப்பாடுகளாகும். அத்தகு இலக்கியங்கள் பலவற்றுள் நாடகப் போக்கும், நாடகத் தனிமொழிக் கூற்றும் மிகுந்துள்ளன. இவை தனித் தன்மை மிக்கவை. இப்பாடல்களுள் பயின்று வரும் மாந்தர்கள் பிறரிடம் நிகழ்த்தும் உரையாடலை நாடகப் போக்குப் பாடல் எனவும் தன் நெஞ்சோடு கிளத்தலை நாடகத் தனிமொழி எனவும் வகைப்படுத்த இயலும். பாடலைப் பாடும் புலவரின் கூற்று இவற்றுள் அமையப் பெறுவதில்லை.

கலித்தொகைப் பாடல்கள் பெரும்பாலும் நாடகப் போக்குத் தன்மையுடன் விளங்கி வருகின்றன. குறிப்பாக 'சுடர்த் தொடீஇ கேளாய்' என்ற பாடல் அனைவர் மனிதிலும் தலைவனின் குறும்புச் செயல்களை வியந்து போற்றி நீங்கா இடம்பெற்ற நாடகப் போக்குப் பாடலாக சிறப்புடன் திகழ்வதைப் போல அகப்பாட்டு ஒன்றில் காணப்படும் நாடகத் தனிமொழியில் காணப்படும் தலைவனின் குறும்புத் திறத்தை அறிவோம்.

புதிதாய் மணமுடித்த தலைவன் ஒருவனோடு ஊடல் கொண்டிருக்கத் தலைப்பட்டாள் அவனது தலைவி. அவன் அவ் ஊடலைத் தணிக்கவும் அவளோடு பழைய படி கூடி மகிழவும் முயல்கிறான். ஆனால் அம் முயற்சி அவனுக்குக் கைகூடாததுடன் மேன்மேலும் அவனுடைய ஊடல் கூடிக் கொண்டிருந்தமையால் மனம் வெறுப்புற்று தன் நெஞ்சுடன் இப்படியாகத் தான் புரிந்த பழங் குறும்பினை நினைந்து காயம் பட்ட மனதைப் போக்கிக் கொள்ள முனைகிறான். இது ஓர் உளத் தற்காப்பு உத்தியாகும்.

அன்றுதான் அத் திருமணத் தம்பதியினருக்கு தலைநாள் இரவு. விருப்பம் ஒன்று கூடிவர தூய ஆடையுடுத்திப் பொலிவுடன் நல் அணிகலன்கள் பல பூட்டியதால் துளிர்க்கும் வேர்வை ஆற்றப்பட்டு உறவோரால் கொடுக்கப்பட்ட தலைவி, மழையொலியைப் போல ஒலிக்கும் மென் ஒலிபரப்பி, நறுமணம் நிறைந்திட்ட பந்தலின் கண் நுகரத்தக்க ஒன்றாகக் காட்சி அளிக்கிறாள்.

அத்தகு புதுத்தன்மை இழக்காத புடவையால் மேனி முழுவதும் போர்த்தி பெரும் புழுக்கத்திற்கு ஆட்பட்டவளிடம் 'உன் பிறை போன்ற நெற்றியில் அரும்பும் வியர்வையினை காற்று மிகக் கொண்டு ஆற்றும் வண்ணம் சிறிது போதுதிற' என்று ஆண்மைத் திறத்துடன் அதனை (பட்டாடையை) வேட்கையுடன் பற்றிக் கவர்ந்ததால் வெளிப்பட்டுத் தோன்றிய தன் உள் வடிவை மறைக்கும் வழியறியாதவளாகி விரைந்து வெட்கிப் போனாள். பின்னர் இதழ் பருத்த பெரிய ஆம்பல் மலர் மாலையின் மணம் வீசியும் வண்டுகள் நாடத்தக்க மலர் சூட்டப் பெற்றும், கரிய அடர் கூந்தல் இருளிடத்துப் பேணி தம் புறம்தெரிந்த அவ்வுறுப்பினை ஒளித்து, வெறுப்பு நீங்கிய சிறந்த இல்லத்தலைவி குணத்துடன் இத்தகைய என் ஆளுமைக்கு அடிபணிந்தவளாகத் தாழ்ந்து கைகூப்பி வணங்கி நின்றாள் எனத் தலைவன் தன் செய்கையினைத் தானே எடுத்துரைப்பதாக அமைந்திருக்கும் அப்பாடல் பின்வருமாறு;

**'தூஉடைப் பொலிந்து மேவரத் துவன்றி**
**மழைப் பட்டன்ன மணன் மலி பந்தர்**
**இழை அணி சிறப்பின் பெயர் வியர்ப்பு ஆற்றித்**
**தமர்நமக்கு ஈத்த தலைநாள் இரவின்**
**உவர் நீங்கு கற்பின்எம் உயிர் உடம்படுவி**
**முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்**
**பெரும்புழுக் குற்ற நின் பிறைநுதற் பொறிவியர்**
**உறுவளி ஆற்றச் சிறுவரை திறஎன**
**ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்**
**உறைகழி வாளின் உருவுசெயர்ந்து இமைப்ப**
**மறைதிறன் அறியாள் ஆகி ஒய்யென**
**நாணினள் இறைஞ்சியோளே - பேணிப்**
**பரூஉப்பகை ஆம்பற் குரூஉத்தொடை நீவிச்**
**சுரும்பிமிர் ஆய்மலர் வேய்ந்த**
**இரும்பல் கூந்தல் இருள் மறை ஒளித்தே'**
**(அகம் - 136:15-29)**


இல்லத் தலைவி மீதான இத்தகைய இரக்கமற்ற சீண்டல்களை ஆணாதிக்க சமூகம் தலைவனின் குறும்பாகக் காலந்தோறும் புனைந்துரைத்து நியாயப்படுத்தி வருவது ஈண்டு நோக்கத்தக்கது.

அதுபோல் பெண் என்பவள் ஆடவனின் உடைமை மற்றும் நுகர்வுப் பொருளாகவும் யாதொரு உணர்சியுமற்று அடங்கி நடப்பவளாகவும் ஒடுங்கிக் கிடப்பவளாகவும் ஒழுக வேண்டியவளாகத் திகழ வேண்டும் என்பதே இப்பாடலின் உட்பொருளாகக் காணப்படுகிறது. ஆண் வண்டினம் மொய்த்து ஆரவாரத்துடன் களிக்கத்தக்க மலராகப் பெண் இருக்கப்பட வேண்டும் என்பது இதன் மற்றொரு இறைச்சிப் பொருளாக இருக்கிறது.

நல்லது செய்வதாகக் கூறி அல்லது செய்து பெண்ணைப் பெரும் துன்பத்துக்கு ஆளாக்கும் இத்தகைய நடத்தை நடப்பு வாழ்வியலோடு ஒப்பிட்டு உணரத்தக்கது. மேலும், நல்ல இல்லத் தலைவி, கணவனின் எத்தகைய விரும்பத்தக்க மற்றும் விரும்பத்தகாத செயல்களுக்கும் பணிந்து ஏற்று நடப்பதை தாம்பத்திய உயர்நெறியாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை அறிவுறுத்துகிறது. இவ்வித அடிமைக் கற்பு நிலை வரலாறு நெடுக தடம்பதித்தே வந்துள்ளது.

ஆகவே, இது போன்ற நாடகத் தனிமொழிப் பாடல்களில் பொதிந்து காணப்படுகின்ற தந்தையாதிக்கக் கருத்துகளை வெளிக் கொணர்வது சார்பியல் சிந்தனையற்ற ஆய்வியல் முறைமையாகும். அப்படி அடிபணிந்து ஒழுகியவள் இப்போது தொடர்ந்து புரிந்து வரும் ஊடலுக்குக் காரணம் யாதோ? என்று தனக்குள்ளாகப் புலம்பும் ஐயப்பாடே இங்கு கருத்து வெளிப்பாட்டுப் பாங்கியலாக உள்ளது நன்கு புலப்படும். இவ் ஊடலுக்குக் காரணம் பெண் தன்னெழுச்சியுற்று தன் மதிப்பை விழைவதேயாகும். ஏனெனில் புனிதம் என்பது இங்கு எதுவுமில்லை. எல்லாம் மீள்வாசிப்பிற்கும் மறு சிந்தனைக்கும் உட்பட்டது. இப்பாடல் அதற்கு விதிவிலக்கல்ல என்பதை மானுடம் போற்றும் மனிதர் கட்டாயம் அறிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணையத்தளங்களில் எந்திரன் பாடல்

ரஜினிகாந்த்-ஷங்கர் கூட்டணியில் உருவாகும் மெகா படைப்பான எந்திரன் படத்தின் பாடல் என்ற பெயரில் ஒரு ஓடியோ ஃபைல் இணையத்தளங்களில் உலாவரத் தொடங்கியுள்ளது. படம் வெளியாகும் முன்பே அதை இணையத்தளங்களில் வெளியிடுவது வாடிக்கையாகிவிட்டது. முன்பு சிவாஜி படத்தின் படப்பிடிப்பு காட்சிகள், பாடல்கள் அனைத்தும் படம் வருவதற்கு சிலமாதங்களுக்கு முன்பே ஒன்லைனில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. தரம் மோசமாக இருந்தாலும் முன்கூட்டியே படத்தின் பாடல்களைத் தெரிந்து கொள்வதில் உள்ள திரில் காரணமாக பலரும் இவற்றை டவுன்லோட் செய்து வந்தனர். இந்த பிரபல்யத்தை பார்த்த கௌதம் மேனன் போன்ற சில இயக்குநர்கள் இதை ஒருவிளம்பர உத்தியாகவே பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். வாரணம் ஆயிரம், விண்ணைத்தாண்டி வருவாயா படங்களில் இதை பெரும் பிரபல்யமாக்க முயன்றார் அவர். இந்நிலையில் இப்போது மீண்டும் ரஜினியின் எந்திரன் பட பரபரப்பு ஆரம்பித்துள்ளது. முதலில் பெருவில் எடுக்கப்பட்ட எந்திரன் படப்பிடிப்பு காட்சிகளின் வீடியோவை விட்டவர்கள் இப்போது அதன் ஓடியோ என்று ஒரு பாடலை வெளியிட்டுள்ளனர். 'என் உயிரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன்' என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடல் 3.16 நிமிடங்கள் ஒலிக்கின்றது. இந்தப் பாடலின் ஒலி (பாடகர் குரல்) தெளிவாக இல்லை.

# இது பியர் பிரச்சினை

முன்னணி நாயகர்களை வைத்துப் படமெடுக்கும்போது ஆயிரம் பிரச்சினைகள் வரும். ஒரு தயாரிப்பாளருக்கு வந்த பியர் பிரச்சினை இது. செல்வராகவன் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் படத்தின் முதல் ஷெட்யூல் லடாக்கில் நடந்தது. இன்னும் பெயர் வைக்கப்படாத இந்தப் படத்திற்காக மாய்ந்து மாய்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் இருவரும். குளிர்பிரதேசத்தில் குவார்ட்டரெல்லாம் ஒரு விடயமே இல்லையல்லவா? இவர்களது பிரச்சினை லோக்கலா,இறக்குமதியா? என்பதுதான். விடயம் தயாரிப்பாளர் காதுக்குப் போக அதிரடியாக ஒரு காரியம் செய்தாராம். டில்லியில் இருந்து ஒரு ஆளைத் தயார் செய்து அவரது மேற்பார்வையில் ஃபிளைட் மூலம் பியர் போத்தல்களை அனுப்பி வைத்தாராம். இதற்கான செலவு மட்டும் சுமார் மூன்றரை இலட்சம்!




# மன்மதன்-2

படப்பிடிப்பு இடைவேளையில் வெட்டி அரட்டைக்கு இடங்கொடுக்காமல் ஓமாக ஒதுங்கி விடுகிறார் யங் சூப்பர் ஸ்டார் சிலம்பரசன். கிசுகிசு ஒட்டிக்குமோ என்ற பயமா? அதெல்லாம் இல்லை. விரைவில் இரண்டு படங்களை இயக்கப் போகிறாராம். விண்ணைத்தாண்டி வருவாயா படத்துக்குப் பிறகு கே.வி.ஆனந்த் இயக்கும் கோ-வில் சிலம்பரசன் நடிக்கிறார். இதையடுத்து பூபதி பாண்டியன் இயக்கும் படம். தயாரிப்பு லிங்குசாமி. இவ்விரு படங்களுக்குப் பிறகு நிக் ஆர்ட்ஸ் தயாரிக்கும் வாலிபன் படத்தை இயக்கி நடிக்கிறார். அத்துடன், மன்மதன் படத்தின் இரண்டாம் பாகத்துக்கான ஸ்கிரிப்பையும் தயார் செய்து வருகிறார். படப்பிடிப்பு இடைவேளையில் தனியாக ஒதுங்குவது இதற்காகத்தானாம்.

## Saturday சினிமா



அசல்
அஜீத்-ஷமீரா ரெட்டி



பிரபல நடிகை நவ்யா நாயருக்கும் தொழிலதிபர் மேனனுக்கும் கடந்த வாரம் திருமணம் நடைபெற்றது.

# கமல் ஜோடியானார் த்ரிஷா

கடைசி நேரத்தில் நயன்தாராவை ஓவர்டேக் செய்து கமல் ஜோடியானார் த்ரிஷா. இந்தப் படத்தை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிக்கிறது. கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் கமல் நடிக்கும் படம். யாவரும் கேளிர். நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து இப்படம் தயாராகிறது. இந்தப் படத்தில் கமல் ஜோடியாக நடிக்க முதலில் பரிசிலிக்கப்பட்டவர் நயன்தாரா. பிறகு தமன்னாவும் போட்டியில் கலந்துகொண்டார். இந்நிலையில், த்ரிஷாவை கமல் ஜோடியாக்கியுள்ளார். ஏற்கனவே, கமலின் மர்மயோகி படத்தில் நடித்த த்ரிஷா கால்ஷீட் கொடுத்திருந்தார். சில காரணங்களால் அப்படம் தொடங்கப்படவில்லை. மர்மயோகியில் நடிக்க த்ரிஷா கால்ஷீட் தந்த காரணத்தால் அவருக்கு யாவரும் கேளிரில் நடிக்கும் வாய்ப்பை கமல் தந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரத்தில் ஒருவனில் ஈழப்பிரச்சினையா?



ரஜினிகாந்த் படம் பார்த்து அற்புதம் என்று பாராட்டியதுதான் ஆயிரத்தில் ஒருவன் குழுவின் சமீபத்திய சந்தோசம். ஆர் வமா ஒரு படம் எடுத்தா விமர்சனம் என்கிற பெயரில போஸ்ட்மார்டம் பண்ணுறாங்களே என்பது செல்வராகவனின் ஆதங்கம். படத்தின் ஊடக மாநாட்டிலும் இது பிரதிபலித்தது. ஹொலிவூட்டில் அவதார் எடுத்தா லாஜிக் பார்க்காம பாராட்டுறீங்க. தமிழில அப்படியொரு முயற்சி பண்ணுனா ஆயிரம் லொஜிக் மிஸ்டேக் பார்க்குறீங்க. ஒரு தமிழனா நான் எடுக்கிற முயற்சிக்கு நீங்க ஆதரவு தரணும் என்றார் செல்வராகவன். பேச்சில் நிதானம் அளவுக்கு சோகமும் கலந்து கட்டியிருந்தது. வெளிநாட்டில் படம் பார்த்திட்டுப் பாராட்டுறாங்க என்ற உபரித் தகவலையும் பகிர்ந்து கொண்டார்கள். படத்தில் தான் காட்டியது வரலாற்றில் வாழ்ந்த சோழனில்லை. அது கற்பனை அரசன் தான் என்று மீண்டும் அழுத்தமாகத் தெளிவு படுத்தினார் செல்வராகவன். படத்தின் இறுதி இருபது நிமிடங்கள் ஈழப்பிரச்சினையை நினைவுபடுத்துகிறதே என்ற கேள்விக்குப் பதிலளித்தவர். அப்படியெதுவுமில்லை. ஈழப்பிரச்சினைக்கு முன்பே நான் அந்தக் காட்சிகளை எடுத்துவிட்டேன் என்றார். இதுவும் வரலாற்றுப் பிழைதான். ஈழப்பிரச்சினை என்ன போன வருடமா தொடங்கியது. முப்பதாண்டு நெடிய போராட்டமல்லவா அது?



# சார்மிக்கு திருமணம்

தமிழில் அறிமுகமாகி தெலுங்கில் செக்ஸி நடிகை என்ற புகழைப் பெற்ற சார்மிக்கு விரைவில் திருமணம் நடக்கிறது. பஞ்சாப்பைச் சேர்ந்த தொழில் அதிபரை மணக்கிறார் அவர். சார்மியின் சொந்த மாநிலமும் பஞ்சாப் தான். தமிழில் டி.ராஜேந்தரின் காதல் அழிவதில்லை படத்தில் சிம்பு ஜோடியாக அறிமுகமானவர் சார்மி. காதல் கிசுகிசு, லாடம், லட்சியம் போன்ற படங்களிலும் நடித்துள்ளார். ஏராளமான தெலுங்குப் படங்களில் கவர்ச்சியின் எல்லையையே காட்டியவர் சார்மி. நடித்தது அலுத்துப் போனதால், இப்போது திருமணத்திற்கு தயாராகிறார். பஞ்சாப்பைச் சேர்ந்த ஒருவருக்கு கழுத்தை நீட்டப்போகின்றாராம். இது ஒரு காதல் திருமணமும் கூட. இருவரும் கடந்த இரு வருடங்களாக ரகசியமாகக் காதலித்து வருகிறார்களாம். இருவரின் பெற்றோருக்கும் சமீபத்தில் காதல் விடயம் தெரியவந்ததும் அவர்கள் சம்மதம் தெரிவித்து விட்டார்களாம். கைவசம் உள்ள தெலுங்குப் படங்களை முடித்து விட்டு திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளார் சார்மி. விரைவில் நிச்சயதார்த்தம் நடக்க உள்ளதாம்.

# மோனிகாவின் சபதம்



குடும்ப வேடத்தில் நடித்து வந்த மோனிகா திடீரென்று ஒரு சுப்ரபாதத்தில் கவர்ச்சிக்குக் கட்சி மாறினார். படம் சிலந்தி. நெருக்கமான படுக்கையறைக் காட்சி, குளியல் காட்சி என்று இவர் காட்டிய கவர்ச்சியில் கதிகலங்கிப் போனார்கள் ரசிகர்கள். தயாரிப்பாளர்களும் அட்வான்ஸ் தொகையுடன் வீட்டை முற்றுகையிட அடடா இதுதான் சினிமாவில் உழைக்கிறதுக்கான வழியா என மோனிகாவே தடுமாறியது 2009 இன் கதை. வடிவேலு சொன்ன மாதிரி ஒப்பனிங் எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. ஆனால், பினிஷிங்?கவர்ச்சி நடிகை முத்திரையுடன் ஒன்றிரண்டு படங்கள் கிடைத்ததே தவிர, சொல்லிக் கொள்ளும்படி எதுவுமில்லை. மோனிகாவுக்கு வரவேண்டிய சில குடும்ப வேடங்கள் கைநழுவிப் போனது உச்சக்கட்ட சோகம். இதனால் 2010 இல் புதிய சபதம் எடுத்திருக்கிறார். அதாவது கவர்ச்சியாக ஒருபோதும் நடிப்பதில்லை. தமிழில் வர்ணம் என்ற ஒரேயொரு படம்தான் மோனிகா கைவசம் இருக்கிறது. மோனிகாவின் சபதம் வெற்றி ஆகுமா என்பது இந்தப் படத்தில் தான் இருக்கிறது.

# சசிக்குமார் ஜோடி தமன்னா




சசிக்குமார் தனது புதிய படத்தின் வேலையில் பிஸியாக இருக்கிறார். பி.எல். தேனப்பன், சமுத்திரக்கனி இதில் முக்கியமான வேடத்தில் நடிக்கின்றனர். அபிநயா நாயகி? இந்தப் படத்தைத் தொடர்ந்து சமுத்திரக்கனி இயக்கும் படத்தில் சசிக்குமார் நடிக்கவிருக்கிறார். படத்தில் அவர் தான் நாயகன்,நாயகி. அதுதான் தற்போது கோடம்பாக்கத்தில் பரபரப்பு. சசிக்குமார் ஜோடியாக நடிக்க தமன்னாவிடம் கால்ஷீட் கேட்டிருக்கிறார்களாம். அவரும் ஓகே சொல்லியிருப்பதாக வரும் தகவல்கள் தான் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியிருக்கிறது. காரணம்,கே.வி.ஆனந்த் இயக்கத்தில் சிம்பு ஜோடியாக நடிக்கக் கிடைத்த கோ பட வாய்ப்பையே அதிக சம்பளம் கேட்டு மறுத்தவர் தமன்னா. தாடிக்காரருக்கு தமன்னா ஓ.கே. சொல்லிவிட்டிருக்கிறார்.



விண்ணைத் தாண்டி வருவாயா
சிம்பு-திரிஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# ஜோதி பாசு

இந்தியாவில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலேயே அரசியலில் தலைசிறந்த அரசியல் பெருமகனாக இருந்த ஜோதிபாசு கடந்த வாரம் இவ்வுலகை விட்டுச் சென்றுள்ளார்.

அனைத்துலக மக்களினாலும் விரும்பப்படும் அரசியல்வாதிகள் வாழ்ந்து மறைந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்திய தேசத்தில் மேற்கு வங்கத்தில் பெங்காளிக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் தான் ஜோதிபாசு.

நடுத்தரக் குடும்பமான இஷிகாந்தா பாசு, ஹேமாதா தம்பதிகளுக்கு 1914 ஜூலை எட்டாம் திகதி பிறந்த ஜோதிபாசுவிற்கு பெற்றோர்கள் இட்ட பெயர் ஜோதிகிரண் பாசு.

கொல்கத்தாவில் 1920 ஆம் ஆண்டு முதல் லொரேற்றா பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை தொடங்கிய பாசு 1925 இல் சென்சேவியர் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந்து பின்னர் இந்துக் கல்லூரி [தற்போது ஜனாதிபதி கல்லூரி] மூலமாக பட்டப் படிப்பினை பூர்த்தி செய்து கொண்டார்.

பின்னர் இங்கிலாந்தில் தனது சட்டக்கல்வியைத் தொடர்ந்த பாசு 1930 களின் பிற்பகுதியில் பிரிட்டனின் கம்யூனிஸக் கொள்கைகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தி வைத்தார்.

பரிஸ்டராக தனது கல்விப்பட்டங்களை உயர்த்திக் கொண்டு இந்தியாவின் கம்யூனிஸக் கட்சியில் இணைந்து 60 ஆண்டுகளுக்கும் மேலாக தனது அரசியல் பயணத்தை தொடர்ந்திருந்தார்.

1946 ஆம் ஆண்டில் வங்காள சட்ட சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஜோதிபாசு அன்று முதல் சட்டசபை உறுப்பினராகி 1972 ஆம் ஆண்டைத் தவிர்ந்த ஏனைய காலப்பகுதிகளில் சட்டசபை உறுப்பினராகப் பதவி வகித்துள்ளார்.

பின்னர் 1977 இல் தேர்தலில் வெற்றிபெற்று 2000 வரை மேற்கு வங்காளத்தின் முதலமைச்சராக இருந்த பாசு தொடர்ந்து தனது கட்சியை 5 சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்தார்.

1984 இல் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொர்ந்து நாடளாவிய ரீதியில் கலவரங்கள் வெடித்த போதும் மேற்கு வங்காளத்தில் வன்முறைகள் எதுவும் நடைபெறாமல் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

தனது உடல் நிலை காரணமாக பதவியை இராஜிநாமாச் செய்திருந்த ஜோதிபாசு 2008 வரை கட்சியில் தொடர்ந்திருந்தும் 2008 ஏப்ரலில் நிறுவப்பட்ட 19 ஆவது அரசியல் குழுவில் ஜோதிபாசு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இருந்தாலும் கட்சி, நாடு சார் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து பாசு ஓய்ந்திருக்கவில்லை.


1996 ஆம் ஆண்டில் பிரதமர் பதவி வழங்குவதாக கூறி அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அதனை ஏற்றுக்கொள்ளாது கட்சிக்காக போராடிய ஒரு மாமனிதர் ஜோதிபாசு.


களங்கமற்ற தனது அரசியல் பயணத்தால் அனைத்து இந்தியர்களையும் உலக மக்களையும் ஈர்த்திருந்த ஜோதிபாசு கடந்த ஜனவரி முதலாம் திகதி நிமோனியாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி இவ்வுலகை விட்டுச் சென்றுள்ளார்.


பிரதமர் பதவியையே வேண்டாமென நிராகரித்த ஒரு அரசியல் தலைவர் இனிமேல் உருவாவது சாத்தியமாகுமா?

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

அன்புடன் அரவணைத்து
ஆதரவுடன் கை கொடுத்து
நெஞ்சத்தில் உதிரம்
தன்னை
நெய்யாக்கி எமக்களித்து
புத்தம் புதுப் பூவாய்
புத்துயிர் தந்து
தாலாட்டுப் பாட்டுப்பாடி
தரணியில் என்னை
ஆளாக்கிவிட்ட
தெய்வம் தாய்

பூங்குழந்தை கீச்சுக்
கொள்ள
புண்ணீரை ஊற்றெடுக்கும்
மேனியெங்கும் நெம்புருகி
கொங்கை இரண்டும் ஈர
மாக்கி
அணைத்தூட்டி கீரந்தை
மழலையின் பசி தீர்க்கும்
பார் கொண்ட தாய்மை
தடவினால் பசி தீரும்
பெத்தெடுத்த தாய்

முந்நூறு நாட்சுமந்து
முத்துப்போல் காத்
தெம்மை
பெற்றெடுத்து
இரவும் பகலும் விழிதூங்
காமல்
விழித்தெம்மைப் பார்த்து
சலத்தில் மலத்தில் சத்தியில்
மத்தியில்
சதா கிடந்து
வளரும் வரை இமைபோல
காத்து
வளர்த் தெடுத்த
கண்கண்ட தெய்வம் தாய்

கோயில் குளம் ஏறி இறங்கி
வரம் என்னும் அருள்
வேண்டி
வயிற்றில் எம்மைச் சுமக்க
வலம் வரும் வதுவையர்
ஐயிரண்டு திங்கள் சுமந்து
அங்கமெல்லாம் நொந்து
பெத்து
செய்யவிரு கை பிறத்தி
லேந்தி
கனகமுலை தந்த தாயே!
நாம் வணங்கும் தெய்வத்
தாய்

கதறியழ கண்ணீர் கசிந்து
வட்டிலிலும் தொட்டிலி
லும்
தோள் மேலும் மார்மேலும்
கட்டிலிலும் வைத்த
ணைத்து
முத்தமிட்டு கிளி எனக்
கொஞ்சி
ஈரமுலை வாய் மணக்க
இன் முகமாய் முகம் மலர
பாலாறு கடவாயில் லோட
பகிர் பெந்தி பசியாற
பார்போற்றி எல்லீரும் பர
மேஸ்வரி
பாலூட்டும் தாய்

தவம் கிடந்து திங்கள்
பத்து
தொந்தி சரியச் சுமந்து
செத்து எம்மைப் பெத்து
அன்புக் கரங்களால்
அணைத்து
அதம் மலர்ந்து
கீரம் தேம்பிய நெஞ்சை
யூட்டி
தேனே அமிர்தமே செல்
வமே
திரவியப்பூ மாமே என
அழைக்கும் தாயே
அன்புத்தாய்

சந்ததமும் கடவுளை
நோக்கி யுகந்து
வரம் கிடந்தெம்மை ஈன்றெ
டுத்து
முட்டச் சிறகிலிட்டு
அந்தி பகல் கையில் கொண்
டெம்மை
மெள்ள முகம் மேல் முகம்
வைத்து
முத்தாடி மகனே என
அழைத்து
தாலாட்டிச் சீராட்டும் தாயே
பாசத் தாய்

நொந்து சுமந்து பெத்து
நோவாமல் லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்து
தரணியில் எம்மை ஒரு
சரித்திரம் ஆக்கிவிடும்
தாயே
வானகமும் வையகமும்
மண்டியிட்டு தாய் கமலப்
பாதங்கள்
எந்நாலும் தொழுது வந்
தால்
முன்னாளின் பூர்வ ஜென்ம
பாவத்தை
மெல்லென நீக்கிடுவா
தெய்வமாக நின்று
ஈன்றெடுத்ததாய்

**சி.ஜெயசீலன்,**
**பெரியபுலோ, சுழிபுரம்.**

# ஒரு அகதியின் ஆதங்கம்

இல்லிடங்களின்
இயல்பு நிலைக்குள்
தன்னை
வழக்கப்படுத்திக்
கொண்டு
வருடங்களின்
வருடல்களில்
வாழ்வும்
நகர்ந்து செல்கின்றது...
நிலமும் நிம்மதியும்
பறிபோனதால்
நிஜங்கள் தினமும்
விலை பேசப்படுகின்றன...
வரிசைப்படுத்திய
குடிசைகளில்-வாழ்வை
நெறிப்படுத்திய
நெரிசல்களில்
உறவைப் பற்றிப் பிடித்தபடி-
நாங்கள்
பூசல்களைப் புனரமைத்து
புதுப்பொலிவைக் களமமைத்து
வாசல்வரை வசந்தங்களை
நேற்றுவரை எதிர்பார்த்தபடி
அகதிகளாக நாங்கள்
இருக்கின்றோம்.

**க.நாகேஸ்வரா,**
**சண்டிலிப்பாய்.**




# துன்பத்தில் இன்பம்

வேளையோ விடிகாலை!
ஞாலமதில் வெடியோசை!
ஊரடங்குச்சட்டத்தால்
உறவுகள் உள் அடக்கம்!
உத்தமர்கள் வீதியிலே
உடைவாள்கள் கையினிலே
வெறிகொண்டு நிற்க!

வீட்டிற்கருகினிலே
ஏழைப் பெண்ணொருத்தி
நிறைமாதக் கர்ப்பிணியாய்...
வலியால் துடிக்கையிலே
அவளைச் சுமந்து
உட்பாதைகளால் விரைந்து
சேர்த்திட்டேன் வைத்தியசா
லையிலே!
அரைமணி நேரம் கழித்து
ஆண்மகவு பிறக்கையிலே
அதுகண்டு ஆனந்தமுடன்...
கவி மீட்டுகின்றேன்
துன்பத்தின் மத்தியிலும்
இன்பம் பெற்றமையால்!

**சிவமைந்தன், அல்வாய்.**

# மறக்கமுடியவில்லை!

மறக்கமுடியவில்லை-நேற்றைய
மரணத்தின் வலிகளை...
துப்பாக்கிச் சத்தங்களும்
துரத்திவந்த எறிகணைகளும்...
தூங்கக்கூட விடவில்லை...
சாவீடுகள் எல்லாம்...
மீண்டும் மீண்டும் சாவீடாகத்தான்
போனது...!
வீடுகள் தோறும் சுடலைகள்...!
முதல்நாள் காலை அம்மாவும்,மாமாவும்;
மறுநாள் ...அப்பாவும்..தங்கையும்...;
அள்ளி எடுத்து அழவும் முடியவில்லை...!
"நாளை நான் இருப்பனோ"...
நம்பவும் இல்லை...

அகதியாய் ஓடினேன்...இன்று
அநாதையுமாய்த் தவிக்கிறேன்!
யாருமில்லை, என்னுடனே
கூடவந்த...
பசியையும் பட்டினியையும் தவிர...
காலம் மாறும்... யாவும் மாறும்
மனதின் ரணங்கள்...
என்று தீரும்...?
பாதையும் திறக்கலாம்...
ஊருக்கும் போகலாம்...
பெற்றோர் வருவாரா?
தங்கை தான் வருவாளா...?
இல்லை...இல்லை...
தொலைந்து போன என் சந்தோசம்தான்
திரும்ப வருமா...?

**தர்சினி-க,**
**கோண்டாவில்.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலியின் மூலத்தை வேருடன் களைவதா?

டாக்டர்
வெ.நாகநாதன்

வலி நிவாரணிகள் தலைவலி, முதுகுவலி, மூட்டுவலி போன்றவற்றிற்கு பரிந்துரைக்கப்படுகின்றன. எனினும், இவை மூட்டுவலி, முதுகுவலி போன்றவற்றிற்கு குறிப்பிட்ட சில காலம் வரை பயன்படுத்துதல் ஏற்புடையது. வலி நிவாரணிகளைத் தொடர்ந்தும் பாவிப்பதன் மூலம் உடலுக்கு சில அசௌகரியங்கள் ஏற்படும்.

வலியானது எமது உடலின் இழையங்களின் சிதைவின் போது உருவாக்கப்படும் இரசாயனப் பொருட்களினால் நரம்புகள் தூண்டப்படும்போது ஏற்படும் ஓர் உணர்வு ஆகும். இது ஒரு நோயல்ல. இதற்கான தோற்றுவாயை இனங் காணாதவரை வலி நிவாரணிகளைத் தொடர்ந்து பாவிப்பது அருவருக்கத்தக்க விடயமாகும். பொதுவாக முதுகுவலி, மார்பு புற்றுநோய் தொடக்கம் முன்னிற்கும் சுரப்பிப்புற்றுநோய் மற்றும் ஏனைய அநேக புற்றுநோய்களும் ஏற்படலாம்.

வயிற்றுவலியானது குடற்புண் குடல்வளரியில் ஏற்படும் அழற்சி மற்றும் சூலகக்கட்டிகள் குடல் முறுக்கமடைதல், சிறுநீர்சணனித் தொகுதிசார் நோய்களிலும் ஏற்படலாம். இவ்வாறான நிகழ்வுகளில் வலியை குணப்படுத்துவதை விட வலியின் தோற்றுவாயை விரைவில் இனங்காணவேண்டிய தேவை உள்ளது. வயிற்றுவலியால் பாதிப்புற்றிருக்கும் போது வலி நிவாரணிகளை பயன்படுத்தும் வேளைகளில் வலியின் தன்மை முற்றுமுழுதாக மறைக்கப்படுகிறது.

வயிற்றுவலியை ஏற்படுத்தும் நோய் மூலத்தை இனங்காணும்போது வலியின் தொடர்ச்சித்தன்மை, வலி உணரப்படும் விதம், வலி நிலைக்கும் கால அளவு, வலியின் பரவுகைத்தன்மை, வலியை அதிகரிக்கும் காரணிகள், வலியுடன் சேர்ந்த சில குணங்குறிகள் என்பவற்றைக் கொண்டு வலியின் தோற்றுவாய்க்குரிய உள் உறுப்பை இனங்காணமுடியும்.

இதன்மூலம் வயிற்றுவலியை ஏற்படுத்தும் உயிராபத்தை விளைவிக்கக்கூடிய நோய் நிலைகள் ஏதும் இருப்பினும் உடனடியாக இனங்கண்டுகொள்ளலாம். அத்துடன், விசேட கதிர்ப்பட சோதனைகள் கழிபொலி நுண்ணொலி (Ultra Sound Scanner) போன்றவற்றின் துணையுடன் மோசமான உயிராபத்தை விளைவிக்கக்கூடிய வயிற்றுவலியை உருவாக்கும் நோய் நிலைகளை காலதாமதமின்றி இனங்கண்டு ஏற்ற சிகிச்சைகள் வழங்க முடியும்.

வலி நிவாரணிகளால் வயிற்றுப்புண் ஏற்பட்டு தொடர்ந்து வலுப்பெறுவதால் குடலில் அல்லது இரப்பையில் துளைகள் ஏற்பட்டு உயிராபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களும் உருவாகின்றது.



# இடை பெருத்தால் இதயநோய் வராது

இடுப்பு, தொடை மற்றும் பின்புறத்திலும் சதைப் பிடிப்பாக இருந்தால் இதயநோய் வராது என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வில் தெரியவந்துள்ளது.

உடலில் வயிற்றுப் பகுதியில் சேரும் கொழுப்பு, உடலின் பின்புற இருக்கைப் பகுதியில் சேரும் கொழுப்பு மற்றும் தொடைப் பகுதியில் உள்ள கொழுப்பு குறித்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிபுணர்கள் குழு ஒன்று ஆய்வு நடத்தியது. ஆய்வு முடிவுகளை பி.பி.சி. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது;


இதயம் மற்றும் இரத்த ஓட்டம் தொடர்பான நோய்களைக் குறைக்க புதிய அணுகுமுறைகளை வகுக்க உடலில் கொழுப்பு எவ்வாறு செயற்படுகிறது என்பதை அறிவதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டது.



இடுப்புக்கு கீழே உடலின் பின்புறத்தில் சேரும் கொழுப்பில் ஆபத்தான கொழுப்பு அமிலங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. இந்தக் கொழுப்பில் அழற்சியைக் கட்டுப்படுத்தும் பொருள் ஒன்றும் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதைத் தடுக்கும் பொருளும் உள்ளது. எனவே இந்தக் கொழுப்பு பாதுகாப்பு தரும் கொழுப்பாகும். இந்தப் பாதுகாப்புப் பொருள்கள் தொப்பைக் கொழுப்பிலோ, தொடையில் சேரும் கொழுப்பிலோ காணப்படுவதில்லை. இடுப்புக்கு கீழே பின்புறத்திலும் தொடையிலும் சேரும் கொழுப்பு எளிதாகச் சிதைவதில்லை. வயிற்றுப் பகுதிக் கொழுப்பு தேவையான காலங்களில் எளிதாக சிதைந்து தேவையான சக்தியை வெளியிடுகிறது. அத்துடன் மற்ற நச்சுத் தன்மையுள்ள பொருட்களும் வெளியாகின்றன. இவை அழற்சியை ஏற்படுத்தக் கூடியவை. இதய நோய், நீரிழிவு நோய் ஆகியவற்றை ஏற்படுத்தக் கூடியவை. எனவே வயிற்றுப் பகுதி கொழுப்பு எப்பொழுதும் அபாயமானது என நிபுணர்கள் கூறுகின்றனர்.

உடலும் இடுப்பின் பின் பகுதியும் கொழுப்பு இல்லாமல் இருக்கும் பொழுது தொடையில் கொழுப்பு இருந்தால் நல்லது. ஆனால் இயற்கையில் அப்படி இருப்பதில்லை. மூன்று பகுதிகளிலும் கொழுப்பு திரள்வது இயல்பாகவே சீரான விகிதப்படி நடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் சுகம் தரும் செக்ஸ் ரோபோ

மனித குலத்துக்கு உதவியாக இருப்பதற்காக ரோபோ என்ற இயந்திர மனிதனை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். இந்த ரோபோக்கள் கார் கழுவுவது, வீடுகளை பெருக்குவது, தொழிற்சாலைகளில் கடின வேலைகளை செய்வது போன்ற வேலைகளை செய்து வருகிறது. இப்போது அமெரிக்காவில் பெண் சுகம் தரும் ரோபோட்டை உருவாக்கி உள்ளனர். லாஸ்வேகாஸ் நகரில் நடந்த அறிவியல் கண்காட்சியில் இந்த ரோபோ அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

5 அடி 7 அங்குலம் உயரத்தில் 60 கிலோ எடையில் இந்த ரோபோ பெண்களைப் போலவே மிருதுவான சதைகளைக் கொண்டு உள்ளன. உடல் உஷ்ணமும் சீராக உள்ளது. செயற்கையாக உருவாக்கப்பட்ட புத்திசாலித்தனத்துடன் இது செயற்படுகிறது. இதற்கு மெக்கானிக்கல் இதயம் உண்டு. அதனிடம் பேசலாம், சிரிக்கலாம், நீங்கள் தொட்டால் அதை உணர்ந்து கொள்ளும். தனிமையான நேரங்களில் ஆண்களுக்கு தேவைப்பட்ட சுகத்தைத் தரும் வகையில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டு உள்ளது. இதற்கு ராக்சி என்று பெயர் சூட்டி உள்ளனர். இந்த ரோபோட் உடன் அதை உருவாக்கிய விஞ்ஞானி டக்ளஸ் ஹைன்ஸ் வாழ்க்கை நடத்தி வருகிறார்.

இந்த ரோபோட்டுகளில் 5 வகைகள் உள்ளன. ஒன்று துணிச்சலானது. சாகசங்கள் செய்யக்கூடியது. இரண்டாவது ரகம் அதிகம் கூச்சப்படக்கூடியது. உங்களுக்கு விருப்பமான மார்பளவில், இனத்தில், நிறத்தில் ரோபாட்டை வாங்கலாம். இந்த ரோபோட்டை இணையத்தளம் மூலம் தான் வாங்கமுடியும். ட்ரூ காம்பானியன்.கம் என்ற இணையத்தளத்தில் ஓர்டர் கொடுக்கலாம்.


# தண்ணீருக்குள் இனி எழுதலாம்

சிலர் எல்லா நேரங்களிலும் பரபரப்பாக இருப்பார்கள். அவர்களுக்கு உதவும் குறிப்பேடுதான் 'வாட்டர் புரூப் நோட்ஸ்'.

இந்த குறிப்பேடை குளியலறை முதற்கொண்டு எங்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். தண்ணீர் பட்டாலும் எழுத்துக்கள் அழியாது. தாளும் கிழியாது. இதற்கான விசேட தாள் மற்றும் பென்சில் தயாரிக்கப்பட்டு உள்ளது.

பெரும்பாலும் இந்தக் குறிப்பேடு ஆய்வாளர்களுக்கு உபயோகப்படும். எப்போதும் உங்கள் குறிப்புகள் அழியாமல் இருக்க விரும்பினால் நீங்களும் வாங்கிப் பயன்படுத்தலாம்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# துன்புறுத்தும் எண்ணங்களை இனி அழிக்கலாம்!

சில நினைவுகள் நம்மை வாட்டி வதைக்கும். பொதுவாக சோகமான சம்பவங்கள், பயம் போன்றவை அடிக்கடி நினைவுக்கு வந்து துன்புறுத்தும்.

மகிழ்ச்சியான சம்பவங்களை நாம் மீண்டும் நினைப்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால், மனதை வேதனைப்படுத்தும் நினைவுகள் மீண்டும் வந்தால் கலங்கி விடுகின்றோம். வாழ்க்கையே பெரும் தொந்தரவாகிவிடுகிறது. அதையே நினைத்து மனநலம் பாதிக்கப்படுவோரும் இருக்கிறார்கள்.

இனி இதுபோன்ற தொந்தரவு தரும் எண்ணங்களைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை. மூளையில் பதிவாகி இருக்கும் அந்த எண்ணப்பதிவை கண்டுபிடித்து அழித்து விடும் விஞ்ஞான முறை கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. விரைவில் இது சிகிச்சை முறையாகவும் வர இருக்கிறது. அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக்கழக ஆய்வுக்குழு கண்டுபிடித்துள்ள இந்த முறைக்கு பெயர் 'பிகேவியர் தெரபி' என்று பெயரிட்டு உள்ளனர்.

நமது எண்ணங்கள் எல்லாம் மூளையில் உற்பத்தி ஆகின்றன. அங்கேயே பதிவு செய்யப்படுகின்றன. இதில் நம்மை துன்புறுத்தும் பய உணர்வுகளும் பதிவாகி இருக்கும். அது தொடர்பான சம்பவங்கள் சூழல்கள் மீண்டும் அமையும்போது நமக்கு பயம் தொற்றிக் கொள்கிறது.


இதுவரை பயம் (போபியா) தொடர்பான சிகிச்சைக்கு, சம்பந்தப்பட்டவர்களிடமே காரணம் கேட்டு அதுபோன்ற சூழல் வராமல் தடுப்பதன் மூலமே பய உணர்வை கட்டுக்குள் கொண்டு வருவார்கள். ஆனால் மீண்டும் பயத்தை ஏற்படுத்தும் சூழல் அமைந்துவிட்டால் நிச்சயம் பயம் மீண்டும் தோன்றிவிடும்.

ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு உள்ள புதிய முறையில் பயத்துக்கு உள்ளானவர்களின் மூளைப்பதிவுகள் ஸ்கேன் செய்து பார்க்கப்படும். அப்போது வண்ணவண்ண கட்டங்களாக பதிவுகள் காட்டப்படும். அதில் நீல நிற கட்டமாக பதிவாகும் நினைவுகள் பய உணர்வைக் குறிக்கும்.

பயத்தை உருவாக்கும் சில சம்பவங்களை ஏற்படுத்தி அதற்கேற்ப பதிவுகள் வேறுபடுத்திக் காட்டும் படியாக இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு அந்த பய உணர்வுகளை அழித்துவிட்டு சோதித்துப் பார்க்கப்பட்டது. இதில் வெற்றி கிடைத்துள்ளது. அதாவது தேவையற்ற எண்ணங்களை அழிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.

முதலில் எலிகளுக்கும் பிறகு 3 குழுவினருக்கும் சோதித்துப் பார்க்கப்பட்டது. ஒவ்வொரு குழுவினருக்கும் வேறுவேறு விதமான சிகிச்சை அளிக்கப்பட்டது. பிகேவியர் தெரபி முறையில் சிகிச்சை பெற்றவர்களுக்கு பயமூட்டிய சம்பவங்கள் மீண்டும் அச்சுறுத்தவில்லை. 'போபியா'வை போக்கும் சிகிச்சை முறையில் இந்த கண்டுபிடிப்பு மறுமலர்ச்சியை உருவாக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

# செவ்வாய் பயணத்தில் கூடுதல் திட்டங்கள்



2012 இல் மனிதர்களின் செவ்வாய் பயணம் தொடங்குகிறது. அங்கு என்னென்ன பணிகள் செய்ய வேண்டும் என்பது பற்றிய விரிவான திட்டங்கள் தீவிரமாக தயாராகி வருகின்றன.

அங்கு கடல் இருக்கிறது. எனவே உயிரினங்களும் வசிக்கலாம் என்பது எதிர்பார்ப்பு. இதற்கேற்ப செவ்வாய் பயணத்தில் மேலும் சில வித்தியாசமான ஆய்வுகளை நடத்தவும் தற்போது முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இதற்காக நாசா ஆய்வு மையத்தில் உள்ள செவ்வாய் அறிவியல் ஆய்வகத்தில் *(Mars Science Laboratory & MSL)* பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு செவ்வாயில் இருந்து சேகரிக்கப்பட்டு வந்த பாறைகள், மணல்கள் தீவிரமாக ஆய்வு செய்யப்படுகிறது.

2012 இல் விண்கலம் இறங்கியதும் விசேட ரோபோ உதவியுடன் மணல் பரப்பில் பல இடங்களிலும் பாறைகளை துளையிட்டு சில இடங்களிலும் மொத்தம் 72 விதங்களில் ஆய்வுக்குழாயில் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. அப்போது வெளிப்படும் வாயுக்களையும் சோதிக்கப்பட உள்ளது.

எவ்வாறு மூலக்கூறுகள் உருவாகின்றன, அங்கு உயிர்க் காரணிகள் எதுவும் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தவும் இந்த ஆய்வு பெரிதும் பயன்படும். உயிர்க் காரணிகளுக்கு கார்பன் ஆதாரமும் மிக அவசியமாகும். ஆனால் வெப்ப அளவுக்கு ஏற்ப கார்பன் இணைப்பு மாறுபடுவதால் அதற்கான சாத்தியக்கூறுகளிலும் வித்தியாசம் இருக்கும் என்பதால் அங்குள்ள சூழல் வெகுவாக கவனிக்கப்படுகிறது.

கடந்த காலத்திலோ அல்லது தற்போதோ உயிரினங்கள் வசிப்பதற்கான தடயங்கள் உறுதி செய்யப்பட்டால் செவ்வாய் நிச்சயமாக மனிதர்கள் வாழ்வதற்கான சிறப்பு கிரகமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# கனடா மாப்பிள்ளை

ஷர்மி
பருத்தித்துறை



மதுமிதாவுக்கு இறக்கை கட்டிப் பறப்பதுபோல் இருந்தது. தான் விரும்பிய வாறே கனடா மாப்பிள்ளை சரி வந்துவிட்டது. இன்னும் ஒருமாதத்தில் கல்யாணம், அடுத்து மூன்று மாதத்திற்குள் கனடாவுக்கு எடுத்து விடுவார் அப்புறமென்ன.... சொர்க்கலோக வாழ்க்கை. கப்பல் மாதிரிக் காரில் பயணம், சுமக்க முடியாத அளவுக்கு நகைகள் என இப்பவே கற்பனையில் மிதந்தார்.

உள்ளூர் வரன்கள் எத்தனையோ சரிவந்த போதும் ‘கனடா மாப்பிள்ளை தான் எனக்கு வேணும் என்ட பிரன்ஸ் எல்லாம் கனடா மாப்பிள்ளைகளைக் கட்டிக்கொண்டு எவ்வளவு சொகுஸா வாழினம். நீங்கள் என்னை ஊர் மாப்பிள்ளைக்குக் கட்டிவைத்து அடுப்படியில் வேலை பார்க்க வைக்கப் போறியளோ? என்று கூறி மறுத்துவிட்டார்.

இதனால் கனடா மாப்பிள்ளை வேட்டையில் இறங்கிய மதுமிதாவின் பெற்றோர் ஒருவாறு ஒருவரைப் பிடித்து விட்டனர். 35 இலட்சம் ரூபா காசு, ஊரில் வீடு, வளவு, 50 பவுண் நகை என்ற பேரப் பேச்சுகளுடன் அந்த மாப்பிள்ளை சரிவர, மதுமிதாவுக்கும் மாப்பிள்ளையை நன்கு பிடித்துவிட்டது.

மாடு சூப்பிய பனங்காய் போன்ற முடி அலங்காரமும் ஒரு காதில் தங்கக் கடுக்கனும் சலூனுக்கு சென்று விட்டு இடையில் எழும்பி வந்தது போன்ற இடையிடையே வெட்டப்பட்ட தாடியமாகக் காணப்பட்ட கனடா மாப்பிள்ளை மதுமிதாவைப் பொறுத்த வரையில் நடிகர் அஜித் போல் அழகாகவே காணப்பட்டார்.

‘ஏய் மதுமிதா... வெளிநாட்டு மாப்பிள்ளையென்டா கொஞ்சம் கவனமா இருடி... வெளிநாட்டில் உள்ள தெரிஞ்சவங்க யாரையும் கொண்டு மாப்பிள்ளையைப் பற்றி நல்லா விசாரி... அவரின் குடும்பத்தைப் பற்றிக் கேள்...’ என்று நண்பிகள் கூறிய போது... ‘போங்கடி... அவர் ரொம்ப நல்லவர், சம்பந்தம் சரிவந்து ஒருகிழமை கூட ஆகலை. அதற்குள் எத்தனை தடவை என்னுடன் பேசிட்டார் தெரியுமா?... உங்களுக்கு எனக்கு கனடா மாப்பிள்ளை கிடைத்தது பொறாமையாடி...’ என்று கூறி அவர்களின் வாயை அடைத்து விட்டார்.

கல்யாண நாளும் நெருங்கியது. மாப்பிள்ளையும் குடும்பத்தோடு கனடாவில் இருந்து வந்துவிட்டார். மதுமிதாவின் தகப்பனார் மகளுக்கு சீதனம் கொடுத்த காணியையும் வீட்டையும் தவிர ஏனைய காணிகளையெல்லாம் விற்று பல இடங்களில் கடன்பட்டு சீதனக் காசை ரெடிபண்ணி விட்டார். ஒருவாறு மதுமிதாவின் திருமணம் ஊரே வாய்பிளக்கும் வகையில் தடல்புடலாக நடந்தேறியது. கனடா மாப்பிள்ளைக்கு மனைவியாகிவிட்ட பெருமையில் மதுமிதா திகைத்திருந்தார்.

4 ஆம் சடங்கன்றும் மதுமிதா வீட்டில் கொண்டாட்டம் களை கட்டியது. ஆடு வெட்டி, போத்தல் உடைத்து கூத்தும் கும்மாளமுமாக விருந்தது. ஊர்ப் பெண்கள் எல்லாம் மதுமிதாவுக்குக் கிடைத்த கனடா மாப்பிள்ளையைப் பற்றியும் அவள் வாழப்போகும் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியும் பேசிப்பேசியே களைத்துப் போயினர்.

கல்யாணம் முடிந்து இருவாரங்களாகிவிட்ட நிலையில் மாப்பிள்ளை கனடா புறப்படத் தயாரானார். விமான நிலையத்தில் மாப்பிள்ளையை பிரிய முடியாமல் மதுமிதாவும் மதுமிதாவைப் பிரிய முடியாமல் மாப்பிள்ளையும் விட்ட கண்ணீரைப் பார்த்து மதுமிதாவின் பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் விட்டனர். தமது மகளுக்கு இப்படியொரு மாப்பிள்ளையைக் கொடுத்ததற்காக கடவுள்கள் எல்லோருக்கும் மனதார நன்றி செலுத்தினர்.

‘மது ஏன் அழுகிறீர்... நான் உம்மை 3 மாதங்களில் பொன்சரில் எடுத்து விடுவேன் தானே... நீர் இப்படி அழுதால் அங்கு போய் என்னால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்... நிம்மதியா என்னால் வேலைக்குக் கூட போக முடியாது... பிளீஸ் அழாதேயும்... நாளை எண்ணிக் கொண்டிரும். 3 மாதம் 3 நாள் போல் போய்விடும். ஓகே... டார்லிங் போய்விட்டு வாறன்’ என்று கூறிவிட்டு மாப்பிள்ளை கனடா சென்று விட்டார்.

கல்யாணம் முடிக்க முன்னர் ஒருவாரத்தில் பல தடவை தொலைபேசியில் கதைத்த மாப்பிள்ளை பின்னர் வாரத்துக்கு ஒருதடவை கதைத்தார், பின்னர் அது மாதத்திற்கு ஒரு தடவையானது. இவ்வாறு 9 மாதங்கள் கழிந்த நிலையிலேயே மதுமிதாவுக்குப் பொன்சர் கிடைத்தது. ஊரெல்லாம் பயணம் சொல்லி நண்பிகளுக்கு விருந்து வைத்து கற்பனைகளுடன் மதுமிதா கனடா பயணமானார்.

கனடா சென்ற மதுமிதா முதல் வாரம் பெற்றோருடன் மிக ஆனந்தமாகவே கதைத்தாள். அடுத்த வாரம் கதைத்த போது முதலில் மதுமிதாவின் அழுகையே கேட்டது. பதறிப் போன பெற்றோர் என்ன மதுமிதா ஏன் அழுகிறாய் என்று கேட்டபோது ‘அம்மா என்ர அவருக்கு இங்கு மனைவியும் 3 பிள்ளைகளும் இருக்கம்மா...’ என்று மதுமிதா கூறியதைக் கேட்டு மதுமிதாவின் கனடா வாழ்க்கையைப் போன்று பெற்றோரும் இடிந்து போயினர்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
**‘Saturday மெயில் சிறுகதை’**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘எங்களுக்கும் இடம் வேண்டும்’

ஏனைய கண்டங்களிலுள்ள சமூகங்களை விட தெற்காசிய சமூகங்கள் இன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் இதில் சகல பெண்களுக்குமான நீதி நியாயத்தையும் சமத்துவத்தையும் எவ்வாறு அனைத்து செயற்பாடுகளிலும் நியாயப்படுத்துதல் என்பது முக்கிய விடயமாகவே காணப்படுகிறது.

பெண்களின் வாழ்வில் அரசியல் தாக்கம் மிகவும் குழப்பமுடைய தாகவே காணப்படுகிறது. பெண்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கின்ற தத்துவங்கள், கொள்கைகள் மீது தனது ஆர்வத்தைத் தெரிவிக்க அரசு கடமைப்பட்டிருந்தது. மறுபுறத்தில் பால் நிலை பாரபட்சங்களினாலும் நடைமுறைகளினாலும் அநீதி இழைக்கப்பட்டதுடன், இன்றும் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பெண்கள் இன்று கல்வி, பொருளாதார, தொழில் துறைகளில் முன்னிலையில் இருக்கின்ற போதிலும் அரசியல் செயற்பாடுகளில் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற விகிதாசாரம் மிகவும் குறைவானதாகவே காணப்படுகிறது.

இலங்கையில் பெண்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் 6 வீதத்திற்குக் குறைவாகவும் மாகாண சபைகளில் 5 வீதமாகவும் உள்ளன. தெற்காசியாவிலேயே அரசியல் துறையில் மிகவும் குறைந்தளவு புள்ளி விபரங்களாக இவை உள்ளதோடு, குறைந்தபட்சம் உள்ளூராட்சி மன்றங்களிலாவது பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் பொருட்டு சட்ட ரீதியில் வலுப்படுத்தப்பட்ட பங்குகள் இல்லாத ஒரேயொரு நாடாக இலங்கை விளங்குவதைக் கண்டித்து 20 இற்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் அண்மையில் ஊர்வலமாகச் சென்று எழுப்பிய கோஷங்கள் தான் இவை...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தான் ஜனாதிபதியாக முன்னர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அதாவது ‘மேற்குலக நாடுகளிலுள்ள பெண்களைப் போலன்றி இலங்கைப் பெண்கள் தமது விடுதலைக்காக கூக்குரலிட்டுப் போராட வேண்டிய தேவை இல்லையெனவும் ஆனால் அரசியல் தலைமைத் துவத்தைக் கருத்திற் கொள்ளும் பொழுது எமது நாட்டில் ஆண்கள் அதனை விருப்பத்துடன் விட்டு நீங்கும் நிலை காணப்படுகிறது. எனினும் அரசியல் ரீதியாக அதிகாரம் அளிக்கப்பட்ட பெண்கள் பற்றிய உருவகக் கதையைச் சட்டத்திற்கு உட்பட்டதாக்கும் ஜனாதிபதியின் கருத்து முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

பெண்கள் தமது உரிமைகளைக் கோரி மிகவும் ஆர்வத்துடன் போராடி வருகின்ற அதேவேளை, வாக்கிற்கு அப்பால் தமது அரசியல் சமூக நோக்கங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதில் அன்று முதல் இன்றுவரை கட்டுப்படுத்தப் பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

கல்விசார் விடயங்களில் பெண்களின் உயரளவிலான எழுதப், படிக்கத் தெரிந்த நிலை 83.1 வீதமாகவுள்ளதாகப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகிறது. அண்மைக் காலங்களில் பெண்கள் பெருமளவு எண்ணிக்கையில் பொதுத்துறையில் புகுந்துள்ள போதிலும் உயர் கல்வி விடயங்களிலும் வேலைவாய்ப்பிலும் பெண்களுக்கான சம சந்தர்ப்பம் தொடர்ந்தும் கடினமாகவேயுள்ளது.




அத்துடன், பெண்கள் அரசியல் நீரோட்டத்திலும் தேசிய நிருவாகத்தின் உயர் பீடங்களிலும் குறிப்பிடத்தக்களவில் ஒதுங்கி குறைந்ததொரு நிலையிலேயே உள்ளனர்.

பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதிலும் அரசியல் பதவிகளுக்கு அவர்களை உயர்த்துவதிலும் ஆசியாவில் இலங்கை முதலிடம் வகித்த போதிலும் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகக் காணப்படுவதாலேயே ஆட்சி அதிகாரத்தில் அவர்களது குரல் மேலெழும்பவில்லை.

அண்மையில் கொழும்பில் பெண்கள் அமைப்பு மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது; ‘பெண் வேட்பாளர்களுக்கு அரசியல் கட்சிகள் காட்டுகின்ற உதாசீனமே குறைந்தளவு தேர்தல் பிரதிநிதித்துவத்திற்கு பிரதான காரணியாகவுள்ளதெனவும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலின் போது நாம் எமது கோரிக்கைகள் தொடர்பில் அனைவரிடமும் கவனத்தை ஈர்க்க விரும்புவதுடன், அனைத்து அரசியல் நிறுவனங்களில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடப்பட்டது. அத்துடன் மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களது பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான திட்டம் என்ன என்பதை நாம் அறிய விரும்புவதுடன், பெண் வேட்பாளர் சட்ட ரீதியில் வலுவுடைய பங்கு முறையொன்றை உருவாக்க வேண்டுமென்றும் குறைந்தபட்சம் பெயர் நியமனத்தில் 1/3 பங்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய முன்வருவார்களாயின் 56 வீத பெண்களின் வாக்குகள் நிச்சயம் எனவும்’ ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

அரசியலில் பெண் தலைமைத்துவம், பெண்கள் அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறை சிரேஷ்ட மாணவியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

‘பெண்களுக்கு எதையும் செய்யக்கூடிய திறமை இருக்கின்றது. ஒரு பெண்ணையும் ஆணையும் அரசியல் வேலைகளில் ஒப்பிட்டுப் பார்த்தால் பெண்களே மிக திறமைசாலிகள்.

அவர்கள் ஒழுங்காகத் திட்டமிட்டும் சரியாகவும் இயங்குவார்கள். பெண்கள் எதையும் திறமையாகச் செய்யக்கூடியவர்கள் என்ற பயம் ஆண்களிடம் இருப்பதனால்தான் பெண்கள் அரசியலுக்கு வருவதை ஆண்கள் விரும்பவில்லை.

பெண் ஒருவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டால் அவருக்குத் தகுதி இல்லை என்றும் செல்வாக்கைப் பயன்படுத்தி தெரிவாகியுள்ளார் எனவும் அதிக வாக்குகளைப் பெற்றால் வாக்குப் பெட்டியில் வாக்குகள் திணிக்கப்பட்டுள்ளதாகவும் ஏளனம் செய்யும் நிலை இங்கு தோன்றியுள்ளது.

மேலும் அதிகளவான பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டுமென்றே நான் நினைக்கின்றேன். காரணம் இன்று பெண்கள் பிரச்சினையைப் பற்றி பட்டும் படாததுமாகப் பேசும் ஆண்கள் எங்கே வாழ்க்கைச் செலவு உயர்வு பற்றிப் பேசுகிறார்கள்? கல்வி, கலாசார சீரழிவு பற்றி எங்கு பேசுகிறார்கள்? இது தொடர்பான பிரச்சினையைப் பெண்கள் தான் பேச முடியும்.

விசேடமாக வாழ்க்கைச் செலவு உயர்வு பற்றி தேர்தல் சமயத்தில் மட்டும் பேசும் ஆண் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்தவுடன் மறந்து விடுவர். ஆனால், ஒரு பெண் தாயாக அல்லது மனைவியாகக் கணவர் என்ன சம்பளத்தைக் கொண்டு வருகிறாரோ அதை வைத்து சமாளிக்க வேண்டும். குழந்தை பசியேற்படும் போது தந்தையிடமல்ல தாயிடமே செல்கின்றது.

ஆகவே பெருமளவு பெண்கள் அரசியலில் ஈடுபட்டு அடிப்படைப் பிரச்சினைகளான பொருளாதார, கல்வி, கலாசார விடயங்களில் ஈடுபாடு கொள்ள வேண்டும். எனவே, அனைத்து பெண்களும் ஒன்றிணைந்து இன ஐக்கியத்துடன் செயற்படுவதன் மூலமே பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள முடியுமெனவும்’ கூறினார்.

ஆக நாட்டின் சம பிரஜைகளாகவுள்ள பெண்கள் தமது உரிமைகளை அனைத்து விடயங்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையொன்றை அரசு ஏற்படுத்த வேண்டிய அதேநேரம், நவீன அரசியலமைப்பு ஒழுங்குகள், சமூகமாற்றம், ஆட்சி உருவாக்கம் போன்றவை பெண்கள் விடயத்தில் உள்வாங்கப்படுவது கட்டாயக் கடமையாகவுள்ளது.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 830 கிலோ மீற்றர் ஓடிய சச்சின்



இந்திய அணியின் 'மாஸ்டர் பேட்ஸ்மன்' சச்சினின் சாதனைக்கு அளவே இல்லை. இவர் களமிறங்கினாலே ஏதாவது ஒரு சாதனை நிகழ்த்தப்படும். டெஸ்ட் ஒருநாள் அரங்கில் அதிக ஓட்டங்கள், அதிக சதமடித்துள்ள இவர் ஓடியெடுத்த ஓட்டங்கள் எத்தனை?, எவ்வளவு கிலோமீற்றர் ஓடியிருப்பார் என்ற வித்தியாசமான புள்ளிவிபரத்தைப் பார்ப்போம்.

சச்சின் சர்வதேச அளவில் இதுவரை 163 டெஸ்ட், 440 ஒருநாள் மற்றும் ஒரு ருவென்ரி-20 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதில் டெஸ்ட் போட்டிகளில் 13,091, ஒருநாள் போட்டிகளில் 17,394 மற்றும் ஒரு ருவென்ரி-20 போட்டியில் 10 ஓட்டங்கள் என மொத்தம் சர்வதேச அளவில் மட்டும் சச்சின் எடுத்துள்ள ஓட்டங்களின் **எண்ணிக்கை 30,485.**

முதல்தரக் கிரிக்கெட்:

தவிர, 264 முதல்தரப் போட்டிகள் (21,859 ஓட்டங்கள்), பிரிவு 'ஏ' அளவில் 527 போட்டிகள் (20,946 ஓட்டங்கள்) மற்றும் 25 ருவென்ரி-20 போட்டிகளில் (750) ஓட்டங்கள் பங்கேற்று சச்சின் எடுத்த ஓட்டங்கள் 43,555. அதாவது ஒட்டுமொத்தமாக சச்சின் 1419 போட்டிகளில் பங்கேற்று 74,040 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

**சிக்ஸர், பவுண்டரி:**

சர்வதேச அளவில் மட்டும் சச்சின் எடுத்த ஓட்டங்களில் ஒருநாள் போட்டியில் 182 சிக்ஸர், 1,901 பவுண்டரிகள் மற்றும் டெஸ்டில் 54 சிக்ஸர், 1,707 பவுண்டரிகள் அடித்துள்ளார். அதாவது சிக்ஸர் பவுண்டரியாக வந்த 15,856 ஓட்டங்களைத் தவிர சச்சின் களத்தில் ஓடியெடுத்த ஓட்டங்கள் மட்டும் 14,639.

பவுண்டரிகள் அடிக்கும்போது எப்படியும் ஒரு ஓட்டத்திற்காக ஓடியிருப்பார். இந்த வகையில் 3608 ஓட்டங்களை (1901+1707) மட்டும் சேர்த்தால் 18,247 ஓட்டங்கள் இவர் ஓடியெடுத்துள்ளார்.

**ஓய்வில்லாக் கால்கள்:**

ஒரு ஓட்டத்திற்கு ஆடுகளத்தில் 20.12 மீற்றர் (22 யார்) ஓட வேண்டும். இதன்படி 18,247 ஓட்டங்களுக்காக சச்சின் சுமார் 370 கிலோமீற்றர் ஓடியுள்ளார். சர்வதேசப் போட்டிகள் தவிர, முதல்தரக் கிரிக்கெட்டில் சச்சின் அடித்த சிக்ஸர், பவுண்டரி எண்ணிக்கை விபரம் தெளிவாகக் கிடைக்கவில்லை. இது சுமார் 460 கிலோமீற்றர் என்று வைத்துக்கொண்டாலும் ஒட்டுமொத்தமாக இவரது கால்கள் சுமார் 830 கிலோமீற்றர் ஓடியிருக்கிறது.

இதில் அதிகபட்சமாக அவுஸ்திரேலிய அணிக்கெதிராக டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 65 கிலோமீற்றர், (53 சிக்ஸர், 652 பவுண்டரி சேர்த்து 5,753 ஓட்டங்கள்) ஓடியுள்ளார். இதற்கடுத்து இலங்கைக்கு எதிராக 58 கிலோமீற்றர் (38 சிக்ஸர், 473 பவுண்டரிகள் சேர்த்து 4,570 ஓட்டங்கள்) தூரம் ஓட்டங்களுக்காக ஓடியுள்ளார்.

**கிண்ண வாய்ப்பு:**

சர்வதேச கிரிக்கெட்டில் 20 ஆண்டுகளுக்கு மேல் நீடித்திருப்பது பெரிய விடயம் இல்லை. ஆனால், ஓய்வில்லாமல் ஓட்டங்களை முடிக்க வேண்டும். அப்பொழுதுதான் அணியில் நீடிக்க முடியும். இதில் சச்சினை முந்துவதற்கு யாரும் இல்லை. இவரது 'ஓயாத கால்கள்' ஒத்துழைக்கும் பட்சத்தில் 2013 இல் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி நிச்சயமாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும்.




# ஆதிக்கம் செலுத்தும் வீரர்கள்

கிரிக்கெட் அரங்கில் கடந்த பத்து ஆண்டில் அவுஸ்திரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங் (துடுப்பாட்டம்), இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் (பந்து வீச்சு) ஆதிக்கம் செலுத்தினர்.

கடந்த பத்து ஆண்டில் டெஸ்ட், ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் பொண்டிங் முன்னிலை வகித்தார். இவர் 107 டெஸ்ட் (9458 ஓட்டம்), 239 ஒருநாள் போட்டியில் (9103 ஓட்டம்) பங்கேற்று இச்சாதனை படைத்தார்.

இதேபோல டெஸ்ட் (84 போட்டி, 565 விக்), ஒருநாள் போட்டியில் (205 போட்டி, 335 விக்), அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையில் இலங்கையின் முரளிதரன் முன்னிலை வகித்தார்.

**கலிஸ் நம்பிக்கை:**

டெஸ்ட் அரங்கில் பொண்டிங்கை தொடர்ந்து அதிக ஓட்டங்கள் சேர்த்த வீரர்கள் வரிசையில் தென்னாபிரிக்காவின் ஜக்கலிஸ் (101 டெஸ்ட், 8630 ஓட்டம்) இந்தியாவின் டிராவிட் (103 டெஸ்ட், 8558 ஓட்டம்), அவுஸ்திரேலியாவின் ஹைடன் (96 டெஸ்ட், 8364 ஓட்டம்) இலங்கையின் மஹேல ஜெயவர்தன (95 டெஸ்ட், 8187 ஓட்டம்) ஆகியோர் 'முதல் -5' வரிசையில் இடம் பெற்றுள்ளனர். இதில் இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் (89 டெஸ்ட், 7129 ஓட்டம்) 7 ஆவது இடத்திலுள்ளார்.







**சச்சின் அபாரம்:**

ஒரு நாள் அரங்கில் பொண்டிங்கை அடுத்து அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் இந்திய மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் (211 போட்டி, 8823 ஓட்டம்) 2 ஆவது இடத்திலுள்ளார். இவரைத் தொடர்ந்து பாகிஸ்தானின் முகமது யூசுப் (246 போட்டி, 8494 ஓட்டம்) இலங்கையின் ஜெயசூரியா (246 போட்டி, 8305 ஓட்டம்), சங்கக்கார (262 போட்டி, 7878 ஓட்டம்) தென்னாபிரிக்காவின் கலிஸ் (218 போட்டி, 7859 ஓட்டம்) ஆகியோர் 'முதல்-5' வரிசையிலுள்ளனர்.

நிற்னி அசத்தல்: டெஸ்ட் அரங்கில் முரளிதரனைத் தொடர்ந்து அதிக விக்கெட் வீழ்த்திய பந்து வீச்சாளர்கள் வரிசையில் தென்னாபிரிக்காவின் நிற்னி (97 டெஸ்ட், 380 விக்.), அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் (65 டெஸ்ட், 357 விக்.) இந்தியாவின் அனில் கும்பிளே (74 டெஸ்ட், 355 விக்.), ஹர்பஜன் சிங் (72 டெஸ்ட், 322 விக்.) ஆகியோர் முதல் -5 வரிசையில் உள்ளனர்.

**பிரட்லீ ஆறுதல்:**

ஒருநாள் அரங்கில் முரளிதரனையடுத்து அதிக விக்கெட் வீழ்த்திய 5 பந்துவீச்சாளர்கள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் பிரட்லீ (186 போட்டி, 324 விக்.), தென்னாபிரிக்காவின் பொலக் (220 போட்டி, 275 விக்.) நிற்னி (172 போட்டி 254 விக்.) உள்ளனர். இலங்கையின் சமிந்தவாஸ் (196 போட்டி, 247 விக்.) ஆகியோர் உள்ளனர்.

இந்தியாவின் சகிர்கான் (7 ஆவது இடம், 167 போட்டி, 232 விக்.) அஜித் அகர்கார் (9 ஆவது இடம், 150 போட்டி, 215 விக்.) ஆகியோர் முதல் -10 வரிசையில் இடம்பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி மன்னன் போலார்ட்






மூன்றாவது இந்தியன் பிரிமியர் லீக் 'ருவென்ரி-20' தொடருக்கான ஏலத்தில் 3.43 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் மேற்கிந்திய வீரர் கெய்ரன் போலார்ட். இவரை ஒப்பந்தம் செய்ய ஐ.பி.எல். அணிக்களுக்கிடையே க்டும் போட்டி நிலவியது. முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு அதிர்ஷ்டம் அடித்தது.

22 வயது இளம் வீரரான போலார்டின் அதிரடியை இந்தமுறை ஐ.பி.எல். தொடரில் ரசிகர்கள் கண்டுகளிக்கவுள்ளனர்.

**அதிரடி ஆட்டம்:** சிறந்த சகலதுறை வீரரான போலார்ட் தனது 19 வயதில் ரினிடாட் டுபாகோ (மேற்கிந்தியா) அணி சார்பில் முதல்தர போட்டிகளில் பங்கேற்றார். பார்படோஸ் அணிக்கெதிரான முதல் போட்டியிலேயே சதமடித்து (126 ஓட்டம்) நம்பிக்கையளித்தார். தொடர்ந்து அசத்திய இவர், லீவர்ட் ஐலேண்ட் அணிக்கு எதிரான தனது 4 ஆவது போட்டியிலும் சதம் (117) விளாசினார்.

இப்போட்டியில் தன்னை அதிரடி ஆட்டக்காரராக நிரூபித்த போலார்ட் 6 சிக்ஸர்கள் உட்பட 71 பந்துகளில் சதம் அடித்தார்.

2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஒருநாள் போட்டிகளில் காலடி வைத்தார். இதுதான் இவரது முதல் சர்வதேச போட்டி. கடந்த ஆண்டு இந்தியாவில் நடந்த சாம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' தொடர் போலார்டை உலகிற்கு அடையாளம் காட்டியது. ரினிடாட் அணி சார்பில் களமிறங்கிய இவர் நியூ சவுத் வேல்ஸ் (அவுஸ்திரேலியா) அணிக்கு எதிரான ஒரு போட்டியில் 18 பந்துகளில் 56 ஓட்டங்கள் விளாசி அணிக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தார்.

இப்போட்டியில் இவரது அதிரடியை கண்ட நியூ சவுத் வேல்ஸ் நிர்வாகம் தங்கள் அணி சார்பில் 'ருவென்ரி-20' போட்டிகளில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்தது. சாம்பியன்ஸ் லீக் தொடரில் அசத்திய இவர் மீது ஐ.பி.எல்.அணிகளின் பார்வை விழுந்தது. இந்தமுறை சச்சின் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் போட்டிகளில் பங்கேற்கவுள்ளார்.

**மிகப்பெரிய கௌரவம்:** ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பது குறித்து போலார்ட் கூறுகையில்; 'ஐ.பி.எல். தொடரில் விளையாடவுள்ளது மகிழ்ச்சியான விடயம். எனது திறமை மீது நம்பிக்கை வைத்து என்னை ஒப்பந்தம் செய்த மும்பை இந்தியன்ஸ் அணிக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் டெண்டுல்கருடன் இணைந்து விளையாடுவதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். எனது சிறு வயது முதல் அவரது ஆட்டத்தை தொலைக்காட்சிகளில் பார்த்து வருகிறேன். தற்போது அவருடன் விளையாடும் பெருமை எனக்குக் கிடைத்திருக்கிறது' என்றார்.

# களத்தில் மீண்டும் உற்சாகம்

சர்வதேச டெனிஸ் அரங்கில் நம்பர்-1 வீராங்கனையாக இருந்தபோது திடீரென 2008 மே மாதம் ஓய்வை அறிவித்து அதிர்ச்சி ஏற்படுத்தியவர் பெல்ஜியத்தின் ஜஸ்ரின் ஹெனின்(27 வயது) சுமார் 20 மாதங்களுக்குப் பின் மீண்டும் (ஜனவரி 2010)டெனிஸ் அரங்கில் காலடி வைத்துள்ள இவர் உற்சாகமாக காணப்படுகிறார்.

இதுவரை ஹெனின் 7 கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். பிரெஞ்ச் ஓப்பனில் மட்டும் இவர் நான்கு முறை (2003,2005,2006,2007)கிண்ணம் வென்று அசத்தியுள்ளார்.தவிர அவுஸ்திரேலிய ஓப்பன் (2004) யு.எஸ். ஓப்பன்(2003,2007) இல் பட்டம் வென்றுள்ளார்.புகழின் உச்சத்தில் இருந்த இவர் திடீரென ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் ஓய்வு பெற்ற சகவீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் டெனிஸ் அரங்கில் காலடி வைத்து யு.எஸ்.ஓப்பனில் பட்டம் வென்றார்.இது ஹெனின் மனதிலும் டெனிஸ் ஆர்வத்தை எடுத்தது.இந்த ஆண்டு சர்வதேச டெனிஸ் தொடர்களில் மீண்டும் காலடி எடுத்து வைத்தார்.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் டெனிஸ் தொடர் இறுதியாட்டத்தில் சக வீராங்கனை கிளைஸ்டர்சிடம் தோல்வியடைந்தாலும் தற்போது அவுஸ்திரேலிய ஓப்பனை வெற்றியுடன் தான் தொடக்கியுள்ளார்.

இதுகுறித்து ஹெனின் கூறுகையில்;பிரிஸ்பேன் இறுதியாட்டத்தில் தோல்வியடைந்ததில் வருத்தமில்லை.இத்தொடர் அடுத்து வரும் போட்டிகளுக்கு ஊக்கமாக இருக்கும்.அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் முன்னணி வீராங்கனை ரஷ்யாவின் எலீனா டெமன்டீவாவை வென்று மூன்றாவது சுற்றில் நுழைந்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணிலடங்கா பயங்கரங்களுக்கு மத்தியில் ஹெய்டியில் அரங்கேறிய அதிசயங்கள்

பிறக்கும் போது நிர்ணயிக்கப்படும் திகதியின் பிரகாரமே இறப்பு வருமென்பதை உலகில் அவ்வப்போது நிகழும் அதிசயங்கள் நிரூபிக்கத்தான் செய்கின்றன.

இல்லையென்றால் இன, மத, பால், வயது வேறுபாடின்றி இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவுகொண்ட ஹெய்டியின் பூகம்ப அனர்த்தத்தின் இடிபாடுகளுக்குள் சிக்குண்டிருந்த 15 நாளேயான சிசுவொன்றை ஒரு வாரத்தின் பின்னர் உயிருடன் மீட்டிருக்க முடியுமா என்ன?

கடந்த 12 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் இடியுண்ட தனது வீட்டின் இடிபாடுகளுக்குள் எவ்வித நீராகாரமும் இன்றி சிக்குண்டிருந்த 15 நாட்களே நிறைந்த எலிசபெத் ஜோசைன்ட் என்னும் இப் பெண் சிசு ஒருவாரம் கடந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இவ் அசாதாரண நிகழ்வு மீட்புக் குழுவை மட்டுமல்லாது முழு உலகையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அழிவடைந்த வீட்டை ஆராய்ந்த மீட்புக் குழுவொன்று பூகம்பம் ஏற்பட்டபோது தூரங்கிக் கொண்டிருந்த அதே கட்டிலில் குழந்தை எலிசபெத்தை கண்டுபிடித்தது.



பூகம்பத்தால் இடியுண்ட பராமரிப்பு நிலையத்திற்கு வெளியே உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்த வயோதிபரொருவருக்கு தன்னார்வ பணியாளரொருவரால் உணவு வழங்கப்படுகிறது. இங்கிருந்த நூற்றுக்கணக்கான முதியவர்கள் அநாதரவாகத் தவிக்க விடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்டில் வீட்டின் இரண்டாம் தளத்திலிருந்து இடிபாடுகளுடன் இணைந்து கீழே விழுந்தபோதும் குழந்தைக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை.

குழந்தை கிடைத்த செய்திகேட்டு ஓடோடி வந்து குழந்தையை அணைத்தெடுத்து பாலூட்டிய தாயார் மிச்செலனி ஜொசைன்ட், கடவுளின் கருணையை நினைத்து மனமுருகியவாறே இச்சம்பவம் பற்றி விபரிக்கையில்;

பூகம்பம் ஏற்படுவதற்கு சற்று முன்னரே இரண்டாம் தளத்தில் குழந்தைக்குப் பாலூட்டிய பின்னர் கீழ்த்தளத்திற்கு வந்தேன். அதிர்வை உணர்ந்தவுடன், குழந்தையைத் தூக்க மேலே செல்ல நான் முயற்சித்தபோது சுவர்கள் யாவும் இடிந்து வீழ்ந்ததினால் நான் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது என்றார்.

குழந்தையை யேசு அழைத்துவிட்டார் என நினைப்பதைத் தவிர, தமக்கு வேறு வழியிருக்கவில்லை என கூறிய எலிசபெத்தின் தாத்தா, கடவுளைத் தவிர, ஏனைய அனைவரும் குழந்தை இறந்துவிட்டதென்றே கருதியதாகவும் கூறியிருக்கிறார்.

இதேவேளை, இக் குழந்தையைத் தவிர 70 வயது மூதாட்டி ஒருவர் தேவாலய இடிபாடுகளுக்குள் இருந்தும் 25 வயதுப் பெண்ணொருவர் கடைத் தொகுதியொன்றின் இடிபாடுகளுக்குள் இருந்தும் அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வாரம் கடந்த நிலையில், உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கட்டிடத்தின் சிதைவுகளும் தூசுகளும் நிறைந்த இடிபாடுகளுக்குள் இருந்து மூதாட்டியை வெளியே மீட்கும்போது அவர் பாடிக்கொண்டே வெளியே வந்ததாக குறிப்பிட்ட மீட்புப் பணியாளரொருவர்;

அவர் உயிருடன் இருப்பார் என எவருமே நம்பாத நிலையில், அவர் உயிருடன் வெளியே வந்தது அங்கிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியது. இடிபாடுகளுக்கு ஊடாக அவருடன் தொடர்பாடலை மேற்கொண்ட மீட்புக் குழுவினர் சிறு குழாய் ஊடாக அவருக்கு நீரை வழங்கினர். அவரை வெளியில் எடுத்தபோது அங்கிருந்தவர்கள் அவரை அணைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததுடன், உடனடியாகவே அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

இவ் அதிசய நிகழ்வுகளால் உற்சாகமடைந்த நூற்றுக்கணக்கான மீட்புப் பணியாளர்கள் மேலும் பலரை உயிருடன் மீட்கலாம் என்ற நம்பிக்கையுடன் இடிபாடுகளுக்குள் தேடுதல் பணியைத் தீவிரமாக்கியுள்ளனர். இதுவரை இடிபாடுகளுக்குள் இருந்து 121 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைநகர் போர்ட் ஒ பிரின்ஸ் சடலங்களால் நிறைந்துள்ள அதேவேளை, இவ்வனர்த்தத்தில் 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் பலியாகியிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூகம்பம் ஏற்படுத்திய எண்ணிலடங்கா பயங்கரங்களுக்கு மத்தியில் நிகழ்ந்துள்ள இவ் அதிசயங்கள் விதியின் வலிமையை மீண்டும் எடுத்துரைத்துள்ளது.

எனினும், இலட்சக்கணக்கான உயிர்களுக்கு ஒரே நேரத்திலா இறப்புக் குறிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணுகையில் விதியின் விளையாட்டுகளில் மீண்டும் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

# குடும்பத்தை விரிவாக்க வேலை நேரத்தை குறைக்கும் தென்கொரியா



எமது அலுவலகங்களில் ஒரு மணி நேர விடுமுறையை உயரதிகாரிகளிடம் கோரி அதற்கு அனுமதி பெறுவதற்கு நாம் படாதபாடுபடும் நிலையில் சனத்தொகைப் பெருக்கத்தை அதிகரிக்க விரும்பும் தென்கொரியா அரசாங்கம் கடமை நேரம் நிறைவுறுவதற்கு முன்னரேயே வீடுதிரும்புமாறு அரச பணியாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வழமையான அலுவலகப் பணிகளை மேற்கொண்டிருந்த தென்கொரிய அரச பணியாளர்களுக்கு கடந்த புதன்கிழமை திடீரென தமது பணிகளை இடைநிறுத்திவிட்டு வீடுதிரும்புமாறு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், முன்னதாகவே வீடுசென்று தமது குடும்பத்துடன் இணைந்திருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையை ஒவ்வொரு மாதமும் அமுல்படுத்த தென்கொரிய அரசு திட்டமிட்டுள்ளது.

மிகவும் குறைவான பிறப்பு வீதத்தை கொண்டுள்ள நாடுகளில் தென்கொரியாவும் ஒன்றாகும். அத்துடன் அயல் நாடான ஜப்பானைவிடவும் குறைவான பிறப்பு வீதத்தையே தென்கொரியா கொண்டுள்ளது.

அதேவேளை இன்னொரு அதிசயமான விடயம் என்னவெனில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தென்கொரியாவில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை உடையவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள், பரிசுத்தொகைகள் போன்றனவும் வழங்கப்படுகின்ற தாம்.



## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

# ஆஸி.யில் குறைவடைந்துவரும் தொழில்புரிவோர் சனத்தொகை

அவுஸ்திரேலியாவில் தொழில்புரிவோர் சனத்தொகை குறைவடைந்து வருவதாக அந்நாட்டுப் பிரதமர் கெவின் ரூட் கவலை வெளியிட்டுள்ளார்.


அவுஸ்திரேலியர்கள் மேலும் அதிகளவில் தமது திறனை பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ள ரூட், இல்லாவிட்டால் பிரபலமான தமது வாழ்க்கை முறையை இழக்க நேரிடுமெனவும் எச்சரித்துள்ளார்.

தற்போது தொழில் புரிவோரில் வயதானோரின் சனத்தொகை அதிகரித்து வருவதால் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள ரூட், அவுஸ்திரேலியாவின் எதிர்கால பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்புவதில் வினைத்திறன் மிக்க உற்பத்தியின் வளர்ச்சி முக்கிய பங்காற்றுமெனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொழில்புரிவோர் சனத்தொகையின் குறைந்தளவான விகிதாசாரத்தின் மூலம் மிகவும் மெதுவான பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதுடன் ஊடாக தற்போது அனுபவிக்கும் வருமான வளர்ச்சி வீதத்திலும் பார்க்க எதிர்வரும் காலங்களில் மிகவும் தாமதமாகவே வளர்ச்சி வீதம் ஏற்படுமென ரூட் கவலை தெரிவித்துள்ளார்.

இதனால், தொழிற்றுறையில் நாம் பாரிய மாற்றங்களை மேற்கொள்ளாவிடில் இந்த நூற்றாண்டில் பாரியளவான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையையோ அல்லது அரசாங்க சேவைகளின் குறைப்பையோ எதிர்கொள்ள நேரிடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காலை வேளை சம்பாத்தியத்தில் மண்...!

நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்ரடாமின் சிலப்பு விளக்குப் பகுதி சுமார் 800 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகும். அங்கு குற்றச் செயல்களையும் ஆட்கடத்தல்களையும் தடுப்பதற்கான நகரின் பிரதிமேயர் லொடெவிஜ்க் அஷ்ஷெர் இல்ஸாரிம் அறிவித்திருக்கும் கட்டுப்பாடுகளை விபசாரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் கடுமையாக ஆட்சேபித்திருக்கிறது.

சிலப்பு விளக்குப் பகுதியின் விபசார விடுதிகளை அதிகாலை 4 மணிக்கும் காலை 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் திறக்கமுடியாது என்று தடை விதித்தார் பிரதிமேயர். விபசாரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படும் பெண்களின் குறைந்த பட்ச வயதெல்லையையும் அவர் 18இல் இருந்து 23ஆக உயர்த்தியிருக்கிறார். பெண்களைச் சுரண்டிப் பிழைக்கும் கும்பல்களின் நடவடிக்கைகளையும் குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவைத்தேன் என்று பிரதிமேயர் கூறுகின்றார்.

ஆனால், விபசாரிகளின் தொழிற்சங்கம் அந்த யோசனையைக் கடுமையாக ஆட்சேபித்திருக்கிறது. காலை வேளைகளிலேயே பல பெண்களினால் விபசாரத்தில் வரும் ஏனைய நடவடிக்கைகளுக்கு பிரதிமேயரின் அறிவிப்பு பெரும் உதவியாக இருக்கும் என்றே பெரும்பாலான மக்கள் கருதுகிறார்கள்.

படுமோசமான குடிகாரர்களும் போக்கிரிகளுமே அந்தக் காலை வேளைகளில் விபசாரவிடுதிகளுக்கு வருகிறார்கள். பெண்கள் அவர்களுக்குப் பயப்படுகிறார்கள். அத்துடன் மிகவும் இளவயதுப் பெண்களும் குறிப்பாகச் சிறுமிகளும் விபசாரத்துக்கு பயன்படுத்தப்படக்கூடிய நிலைமையும் அந்தக் காலை வேளைகளிலேயே காணப்படுகின்றது. அதனால்தான் இந்தத் தடை உத்தரவு யோசனையை முன் பெருந்தொகைப் பணத்தை சம்பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது என்பதே தொழிற்சங்கத்தின் வாதமாக இருக்கின்றது.

ஆம்ஸ்ரடாம் பிரதிமேயர் தனது யோசனைகளை வாபஸ் பெறவேண்டும் அல்லது போராட்டம் நடத்தப்படும் என்று தொழிற்சங்கத்தின் பேச்சாளரான மெட்கே பிளாக் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

விபசாரத்தில் ஈடுபடுவதற்கான சட்டபூர்வ வயதெல்லையை அதிகரிப்பது கூடுதலான சிறுமிகள் சட்டவிரோதமாக இயங்கும் விபசாரவிடுதிகளுக்குச் சென்று தொழில் பார்ப்பதற்கே வழிவகுக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நெதர்லாந்தில் விபசாரம் 2000ஆம் ஆண்டில் சட்டபூர்வமாக்கப்பட்டது. ஆனால் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நகரின் உட்புறங்களில் சட்டவிரோதமான செயல்களை ஒழித்துக்கட்டுவதற்குமாக விபசாரத் தொழில் மீது கடுமையான கட்டுப்பாடுகளை அதிகாரிகள் அண்மைக் காலமாக விதித்துவருகிறார்கள்.

அம்ஸ்ரடாமின் சிலப்பு விளக்குப் பகுதியில் விபசார விடுதிகளின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதற்கான திட்டத்தை 2008ஆம் ஆண்டு நெதர்லாந்து அரசாங்கம் அறிவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், [illegible] இல் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.